இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 159 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 06 – சனிக்கிழமை 20 ஜனவரி 2024 – மதுரை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 159: Thiruvalluvar Year - 2055 - Thai 06 - Saturday 20 January 2024 - Madurai ★★ 16 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டின் புகழ் மகுடத்தில் மற்றும் ஒரு மாணிக்க முத்திரை! கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்- 2023

# பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்!

## ஆளுநர் ஆர்.என்.ரவி - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலை வகித்தனர்!

**சென்னை, ஜன. 20 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் - 2023-ஐ, சென்னையில் நடத்திட முடிவு மேற்கொண்டதைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசின் உயர் அலுவலர்கள், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிகாரிகள் அனைவருடனும் இணைந்து இந்தப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்கள்.**





இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சென்னைக்கு வருகை தந்து கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்துச் சிறப்பிக்குமாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 4-1-2024 அன்று புதுடெல்லி சென்று அழைப்பு விடுத்தார்கள்.

இந்த அழைப்பினை ஏற்றுக் கொண்ட பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நேற்று (19.1.2024) சென்னைக்கு வருகை தந்து மாலை 6.00 மணிக்கு ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை முறைப்படி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுகள், செய்தி மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், ஒன்றிய அரசின் உள் விவகாரங்கள், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை இணையமைச்சர் நிசித் பிரமாணிக், தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்றனர்.

23-1-2024 அன்று தொடங்கி 31-1-2024 வரை நடைபெறும். இந்த விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் மட்டுமல்லாமல் திருச்சி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களிலும் நடைபெறுகின்றன.

தடகள விளையாட்டுகளான கால்பந்து, கபடி. வாலிபால், ஜுடோ, பளு தூக்குதல், ஸ்குவாஸ், வில்வித்தைகள், குத்துச் சண்டை, பூப்பந்தாட்டம், டேபிள் டென்னிஸ், சைக்கிள், ஜிம்னாஸ்டிக், நீச்சல், ஆக்கி, டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், யோகா, மல்யுத்தம் முதலிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில் நம்நாட்டின் 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றிய நிர்வாகப் பகுதிகளிலிருந்து 18 வயதிற்குட்பட்ட வயதுப்பிரிவில் 5,500க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், 1,600க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களும் பங்கேற்கின்றனர். இந்த விளையாட்டுப் போட்டிகளைச் சிறப்பாக நடத்திட 1,000க்கும் மேற்பட்ட நடுவர்கள், 1,200க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் துணைபுரிவார்கள்.

இந்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023இல் முதல்முறையாக தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் உட்பட மொத்தம் 27 விளையாட்டுகள் காட்சி விளையாட்டுகளாக (DEMO Sports) இடம் பெறுகின்றன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொன்றும் நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகியவை குறித்த விவரங்கள் விளையாட்டு ஆர்வலர்களுக்கு வசதியாக இணையம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இந்திய விளையாட்டு ஆணையம், பல்வேறு தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திட்டமிட்டுள்ளது.

போட்டிகள் சிறந்த முறையில், நடைபெறுவதற்கான கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு வீரர்கள் வந்து தங்குவதற்கான இடவசதிகள், உணவு வசதிகள், போட்டி நடைபெறும் இடங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# 2024 நாடாளுமன்றத் தேர்தலையொட்டி தி.மு.க. தலைமைக் கழக அறிவிப்புகள்!

## 2024 - நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு

### கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழகப் பணிகளை ஒருங்கிணைக்கவும் மேற்பார்வையிடவும் பின்வரும் குழு அமைக்கப்படுகிறது.

**மாண்புமிகு கே.என்.நேரு**
**திரு.ஆர்.எஸ்.பாரதி**
**மாண்புமிகு எ.வ.வேலு**
**மாண்புமிகு தங்கம் தென்னரசு**
**மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 18-01-2024

**மு.க.ஸ்டாலின்**
தலைவர்,
தி.மு.க.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திடும் குழு

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

தொகுதி உடன்பாடு குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட

**தி.மு.க. தலைமைக் கழகம் அமைத்துள்ள குழு**

குழு தலைவர் : **திரு.டி.ஆர்.பாலு**
(கழகப் பொருளாளர்)

குழு உறுப்பினர்கள் : **திரு.கே.என்.நேரு**
(கழக முதன்மைச் செயலாளர்)

**திரு.இ.பெரியசாமி**
(கழகத் துணைப் பொதுச்செயலாளர்)

**திரு. க.பொன்முடி**
(கழகத் துணைப் பொதுச்செயலாளர்)

**திரு. ஆ.ராசா**, எம்.பி.,
(கழகத் துணைப் பொதுச்செயலாளர்)

**திரு. திருச்சி சிவா**, எம்.பி.,
(கழக கொள்கைப் பரப்புச் செயலாளர்)

**திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
(கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்)

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 18-01-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்க குழு

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையினைத் தயாரிக்க அமைக்கப்பட்ட குழுவினர் விவரம்:

**தலைமை:** **திருமிகு. கனிமொழி கருணாநிதி எம்.பி.,**
(கழகத் துணைப் பொதுச் செயலாளர்)

**திரு. டி.கே.எஸ்.இளங்கோவன்**
(தலைமைக் கழகச் செய்தித் தொடர்புத் தலைவர்)

**திரு. ஏ.கே.எஸ்.விஜயன்**
(கழக விவசாய அணிச் செயலாளர்)

**மாண்புமிகு பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன்**
(கழகச் சொத்துப் பாதுகாப்புக் குழுச் செயலாளர்)

**மாண்புமிகு டி.ஆர்.பி.இராஜா**
(கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர்)

**மாண்புமிகு கோவி.செழியன்**
(கழக வர்த்தகர் அணி துணைத் தலைவர்)

**திரு. கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி.,**

**திரு. சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.,**
(கழக மாணவரணிச் செயலாளர்)

**திரு. எம்.எம்.அப்துல்லா எம்.பி.,**
(கழக அயலக அணிச் செயலாளர்)

**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.,**
(கழக மருத்துவ அணிச் செயலாளர்)

**மாண்புமிகு மேயர் பிரியா**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 18-01-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 20-01-2024



# சேலம் வெல்லட்டும்! இந்தியாவுக்குச் சொல்லட்டும்!

“திடீரென்று இளைஞரணியைப் புதிதாக உருவாக்க வேண்டிய அவசியம் என்ன?” - என்று தலைவர் கலைஞரிடம் கேள்வி கேட்கப்பட்டது!

“கழகத்தில் இளைஞர்கள் அதிகமாகி விட்டார்கள், அதனால்தான்” என்றார் தலைவர் கலைஞர்!

“திடீரென்று இளைஞரணி மாநாட்டை இப்போது நடத்த வேண்டிய அவசியம் என்ன?” என்று இப்போது யாராவது கேட்பார்களேயானால், “கழகத்தில் இளைஞர்கள் அதிகமோ அதிகம் ஆகிவிட்டார்கள்” என்பதுதான் அதற்குச் சரியான பதிலாக இருக்க முடியும்!

எந்த இயக்கத்திலும் இத்தனை இலட்சம் இளைஞர்கள் இல்லை. அதுமட்டுமல்ல; இத்தனை இலட்சம் இளைஞர்களை வழிநடத்தும் இலட்சியத் தலைமையும் எந்த இயக்கத்திலும் இல்லை.

இளைஞர்களால் உருவாக்கப்பட்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். கல்லூரிக் காளையர்களாக அப்போது பலரும் சேர்ந்தார்கள். பள்ளிப் பருவத்தில் 14 வயதில் தமிழ்க்கொடி தாங்கி போராட்டக் களத்துக்கு வந்துவிட்ட கலைஞரும் கைகோர்க்க; அறிவியக்கமாகவே திராவிட முன்னேற்றக் கழகம் உருவானது.

**‘அனுபவம் அற்றவர்களால் அரசியல் களத்தில் என்ன செய்துவிட முடியும்?’ என்று ஏளனப்பார்வை பார்த்தவர்களை, ‘இவர்களைப் போல நாமும் வெல்ல வேண்டுமே’ என்று ஏக்கப் பார்வை பார்க்க வைத்தார் பேரறிஞர் அண்ணா. ‘நான் குள்ளமாக இருக்கலாம். ஆனால் நாங்கள் நடத்த இருக்கும் புரட்சி குள்ளமானதாக இருக்காது’ என்றார் பேரறிஞர் அண்ணா.**

அழகிய தமிழ் பேசும் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், ஆர்வலர்கள், போராட்டக்காரர்கள் என அனைவரையும் இணைத்து பேரறிஞர் அண்ணா உருவாக்கிய இயக்கம், பதினெட்டு ஆண்டுகள் இடைவிடாமல் இயங்கிக் கொண்டே இருந்தது. அதுதான் 1967 வெற்றிக் கனியை பறித்துக் கொடுத்தது. ‘சிங்கிள் டீ குடித்துக் கொண்டு தி.மு.க. தொண்டர்கள் வேலை பார்த்தார்கள். அதுதான் வெற்றிக்குக் காரணம்’ என்றார் அந்தத் தேர்தலில் முதலமைச்சர் பதவியைப் பறி கொடுத்த பெரியவர் பக்தவத்சலம். அடுத்தடுத்த வெற்றிக்கும் அதே தொண்டர்கள்தான் காரணகர்த்தாக்கள்.

**சினிமா மாயை 1980களில் ஒரு சுழற்சியை உருவாக்கிய போது, இளைஞர்களுக்கு இலட்சியப்பாதையைக் காட்டி உணர்வூட்டினார் தலைவர் கலைஞர். அப்போது அவர் தேர்ந்தெடுத்த சாரதிதான் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள். ‘நெருப்பின் பொறிகளே நீங்கள்தான் தேவை’ என்று சொன்ன கலைஞர் ஏந்தியதே தளபதிதான். அவசர நிலைப் பிரகடன நெருக்கடி நெருப்பாற்றில் நீந்தி புடம் போட்ட தங்கமாக வெளியில் வந்திருந்தார் தளபதி. ‘நான் தென்றலைத் தீண்டியது இல்லை, தீயைத் தாண்டி இருக்கிறேன்’ என்ற கலைஞர் சொல்லுக்கு இலக்கணமாக அமைந்திருந்தது தளபதியின் வாழ்க்கை.**

உணர்வெனும் உருக்கை உருக்கி உருவாக்கிய இளைஞர் அணிக்கு தளபதியை அமைப்பாளர் ஆக்கிய பிறகு கழகம் பல பாய்ச்சலைக் கண்டது. மாநாடுகள் எங்கும் இளைய தலைகள். வெள்ளுடை அணிந்த இளைய பட்டாளமானது இருவண்ணப் பாசறைக் கூடமாக கழகத்தை மாற்றியது. பேரணியா, பொதுக்கூட்டமா, சிறை நிரப்புதலா, சிலிர்த்துக் கிளம்புதலா? எல்லா இடங்களிலும் இளைஞரணியினர் கைப்பற்றிக் கழகத்தை நிலைநிறுத்தினார்கள். அவர்களே பல்வேறு பொறுப்புகளை அடைந்தார்கள். கழகத்தையும் பொறுப்புகளில் அமர்த்தினார்கள்.

இளைஞரணிச் செயலாளராக இருந்த தளபதி அவர்கள், கழகத் தலைவர் ஆகி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் அமர்ந்திருக்கிறார் என்றார் அவரை உருவாக்கிய களம், இளைஞரணி ஆகும்.

**காலம், தனக்கான அடுத்த தளபதியை உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. அவர்தான், இன்றைய இளைஞரணிச் செயலாளர் இனிய உதயம் உதயநிதி அவர்கள். 2019 முதல் நான்கே ஆண்டுகளில் கழகத்தின் அடையாளமாக மட்டுமல்ல, தமிழ்நாட்டின் அடையாளமாகவே உயர்ந்து நிற்கிறார். ‘வாரிசு’ என்று சொல்லி ஒற்றை வார்த்தைக்குள் சுருக்க நினைத்தது ஒரு கூட்டம். நூற்றாண்டு கால திராவிட இயக்கத்தின் கொள்கைகளுக்கு வாரிசாக அவர் கிளம்பி பேச ஆரம்பித்ததும், ‘அவரைச் சீண்டாமல் இருப்பதே சரியான முடிவு’ என்று தமிழின எதிரிகள் வாயைப் பொத்திக் கொண்டார்கள்.**

கொள்கையைக் காக்கும் சமரில் சளையாத போராளியாக வலம் வந்த காரணத்தால்தான் அவர் இன்று அகில இந்தியப் புகழையும் அடைந்து உயர்ந்து நிற்கிறார்.

‘இரண்டாவது மாநாடு’ என்பது வெறும் வரிசையாக இல்லாமல், ‘மாநில உரிமை மீட்பு மாநாடாக’ இதனை அடையாளப்படுத்தியதில்தான் இளைஞரணிச் செயலாளரின் வெற்றி அமைந்துள்ளது. ‘இது இந்தியாவே எதிர்பார்க்கும் மாநாடு’ என்று கழகத் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்ன சொல் என்பது நூறு விழுக்காடு உண்மையாகும்.

**இலட்சக்கணக்கான இளைய பட்டாளத்தை மாநில சுயாட்சிக்காகவும், இந்தியக் கூட்டாட்சிக்காகவும் சேலத்தில் கொண்டு வந்து நிறுத்துவதன் மூலமாக, இன்று நாம் அடைய வேண்டிய கொள்கை என்ன என்பதை தலைப்பிலேயே சொல்லித் தந்துவிட்டார் இளைஞரணிச் செயலாளர். கொள்கையை ஊட்டுதலே முதல் வெற்றி. அதற்காகத்தான் சேலம் மாநாடு. நாடாளுமன்றத் தேர்தலை நாம் எந்த நோக்கத்துக்காகப் பயன்படுத்த வேண்டும் என்பதும் இந்த தலைப்பிலேயே இருக்கிறது.**

சேலம் வெல்லட்டும்!

இந்தியாவுக்குச் சொல்லட்டும்!

## பூந்தமல்லியில் தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள்!

திருவள்ளூர், ஜன. 20–

தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு பூந்தமல்லி நகராட்சி சார்பில் சமத்துவ பொங்கல் விழா நகராட்சி வளாகத்தில்முன்னாள் அமைச்சர் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ ஆலோசனை படி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி உத்தரவின்படி நடைபெற்றது.

பூந்தமல்லி நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் தலைமை தாங்கினார். நகர் மன்ற துணைத் தலைவர் ஸ்ரீதர், ஆணையர் லதா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். பூந்தமல்லி திமுக நகர செயலாளர் ஜி. ஆர். திருமலை சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களுடன் இணைந்து பொங்கல் வைத்தார். பின்னர் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடை மற்றும் பொங்கல் பரிசு தொகுப்புகளை நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் வழங்கி பேசியதாவது:

நாட்டின் முதுகெலும்பாக இருப்பவர்கள் விவசாயிகள். அந்த விவசாயத்துக்கு ஆதாரமாக இருப்பது சூரியன். அந்த சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விழா பொங்கல் விழா. உலகத்திலேயே சூரியனுக்கு, இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் ஒரே இனம் தமிழினம் மட்டுமே. உலகமெங்கும் தமிழர்கள் எங்கெல்லாம் பரவியிருக்கிறார்களோ அங்கெல்லாம் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டுக்காகவும் உலகமெல்லாம் பரவியுள்ள தமிழர்களுக்காகவும் பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் என்று அவர் கூறினார்.

இதையடுத்து அனைவருக்கும் அறுசுவை விருந்து பரிமாறப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அதிகாரிகள், திமுக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.01.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் சார்நிலைப் பணியில் செயல் அலுவலர் நிலை–3 பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 64 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர், ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.1.2024) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் செவி மாற்றுத்திறன் மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக சேலம் மாவட்டம், ஏற்காடு அடிவாரம், கொண்டப்பநாய்க்கன்பட்டியில் 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கான புதிய கட்டடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் ஏ.கே. கமல் கிஷோர், ஆகியோரும், சேலத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் செ. கார்மேகம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. இளைஞர் அணி மாநில மாநாடு - மத்தியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும்!

## அமைச்சர் கே.என். நேரு பேட்டி!

சேலம், ஜன.20-

சேலம் தி.மு.க. இளைஞர் அணி மாநில மாநாடு மத்தியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் என்று கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு கூறினார்.

**இளைஞரணி 2வது மாநில மாநாடு!**

தி.மு.க. இளைஞர் அணி 2-வது மாநில மாநாடு சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் வருகிற 21-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது. இந்த மாநாட்டு பணிகள் அமைச்சர் கே.என். நேரு முன்னிலையில் நடந்து வருகிறது.

இந்த பணிகளை நேற்று பார்வையிட்ட அமைச்சர் கே.என்.நேரு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தி.மு.க. மாநில மாநாடு இந்தியாவையே திரும்பி பார்க்க வைக்கும். தமிழ்நாடு முழுவதும் இருந்து 10 ஆயிரம் பஸ்கள், 50 ஆயிரம் வேன்கள், அதுதவிர கார்கள், லாரிகளில் என சுமார் 5 லட்சம் பேர் வருவார்கள்.



அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து இருக்கிறோம். வருகிற 20-ந் தேதி தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டு திடலுக்கு வருகிறார்.

அப்போது இருசக்கர வாகன ஊர்வலத்தை பார்வையிடுகிறார். தொடர்ந்து 3 ஆயிரம் டிரோன்கள் ஷோ நடக்கிறது. மாநாட்டில் இளைஞர் அணியினர் சீருடையில் கலந்து கொள்ள இருக்கிறார்கள். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஒவ்வொரு மாவட்டமாக சென்று மாநாட்டின் நோக்கம், கட்சியில் உள்ள இளைஞர்களின் பொறுப்பு என்ன என்பதை எல்லாம் கூட்டம் வாயிலாக பேசி வருகிறார்.

எனவே அனைத்து மாவட்ட இளைஞர் அணியினரும் உற்சாகமாக மாநாட்டுக்கு வர இருக்கிறார்கள். இந்த மாநாட்டு ஏற்பாடு தி.மு.க.வினர் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. வருகிற தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை தி.மு.க. பெறும். இந்த மாநாடு மத்தியில் நிச்சயம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான மாநாடாக அமையும்.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு கூறினார்.

## மாங்கனி மாநகரில் விழாக் கோலம்!

### மிகப் பிரம்மாண்டமாக சேலம் இளைஞரணி மாநாட்டு ஏற்பாடுகள்!

சேலம், ஜன. 20 -

சேலம் தி.மு.க. இளைஞரணி 2வது மாநில மாநாட்டு ஏற்பாடுகள் மிகப்பிரமாண்டமாக அமைக்கப் பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் நாளை (21.1.2024) தி.மு.க. இளைஞரணி 2வது மாநில மாநாடு நடை பெறுவதை யொட்டி கழகத் தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் கழக இளைஞரணி மாநில செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் விமானம் மூலம் வருவதை யொட்டி சேலம் விமான நிலையம் காமலாபுரம் முதல் தி.மு.க., இளைஞரணி 2வது மாநில மாநாடு நடைபெறும் பெத்தநாய்க்கன் பாளையம் திடல் வரை 65 கிலோ மீட்டர் தூரத்திறகு சாலையின் இருபுறமும் கருப்பு சிகப்பு இருவண்ணக் கொடி மற்றும் கழக கொடி தோரணங்கள். மின் விளக்கு அலங்காரம் செய்யப்பட்டு மிக பிரமாண்டமாக காட்சி அளிக்கிறது.

சேலம் மாவட்டம் முழுவதுமே திரும்பிய திசையெங்கும் கருப்பு சிகப்பு கொடித் தோரணங்களாக மாற்றாரும் மருளும் வண்ணம் காட்சி அளிக்கிறது.

மாநாட்டுப் பந்தல் 100 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமான அலங்கார வேலைப்பாடுகளுடன். அமைக்கப்பட்டுள்ளது.10 லட்சம் சதுர அடியில் 2 லட்சம் இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டு ஒரே நேரத்தில் 5 லட்சம் பேர் மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கும் வகையில் 50 இடங்களில் காணொலித் திரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

5 லட்சம் சதுர அடி பரப்பில் சமையல் கூடம் மற்றும் ஒரு லட்சம் பேர் அமர்ந்து சாப்பிடும் வகையில் டேபிள்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாகனங்கள் நிறுத்த சுமார் 200 ஏக்கரில் இடம் ஒதுக்கப்பட்டு எளிதாக மாநாட்டுப் பந்தலை அடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சேலத்தில் இளைஞர் அணி சார்பில் - புகைப்பட நிபுணர்

# கோவை சுப்பு ஏற்பாட்டில் இன்று புகைப்படக் கண்காட்சி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

சேலம், ஜன. 20 -

சேலத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில் புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாட்டில் புகைப்படக் கண்காட்சி நடைபெறுகிறது.

இந்தக் கண்காட்சியை இன்று (20.01.2024) மாலை முரசொலி மாறன் அரங்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

சேலத்தில் தி.மு.க. இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாடு நாளை (21.01.2024) இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் பிரமாண்டமாக நடைபெறுகிறது. இம்மாநாட்டில் தமிழ்நாடு முழுவதுமிருந்து இளைஞர் அணியினர் இலட்சக்கணக்கில் திரள்கின்றனர்.

இம்மாநாட்டில் பல்வேறு தலைப்புகளில் அமைச்சர்கள், கழக முன்னணியினர் பங்கேற்றுப் பேசுகின்றனர்.

இம்மாநாட்டினை யொட்டி இளைஞர் அணி சார்பில் முரசொலி மாறன் அரங்கத்தில் இளைஞர் அணி சிறப்புக் கண்காட்சி நடைபெறுகிறது. இக்கண்காட்சியை புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாடு செய்துள்ளார்.

இக்கண்காட்சியை இன்று மாலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார். இதனைத் தொடர்ந்து இன்றும் நாளையும் இக்கண்காட்சி நடைபெறுகிறது.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு உறையூர், உய்யக்கொண்டான் திருமலை, தென்னூர் கே.எம்.சி. மருத்துவமனை, கருமண்டபம் பீமாநகர், காஜாமலை உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு வேஷ்டி, சட்டை,சேலை, உணவு உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்தநிகழ்ச்சியில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி,மாநகர மேயர் அன்பழகன், மாவட்டத் துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ் , சேர்மன் துரைராஜ்,முத்துச்செல்வம், காஜாமலை விஜய்பகுதி செயலாளர் போட்டோ கமல் இளங்கோ,நாகராஜ் கனகராஜ், கோட்டத் தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி, மற்றும் கழக நிர்வாகிகள் பி ஆர் பாலசுப்பிரமணியன், தொமுச குணசேகர் மணிவண்ணன் புஷ்பராஜ் மூவேந்தரன் ராமதாஸ் திருநாவுக்கரசு, காளை, கிராப்பட்டி செல்வம், கலைச்செல்வி, மனோகர் சுரேஷ் பரமசிவம் கருத்து கதிரேசன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்..

# ஆளுநர் போன்றோரின் நரித்தனங்களை வாலறுத்த பூமி தமிழ்நாடு!

**எப்படி நினைப்பது இந்த மனிதரை?**
**வக்ரபுத்திக்காரர் என்பதா?**
**குறுமதியாளர் என கணிப்பதா?**
**சேடிஸ்ட் என எண்ணுவதா?**
**திருந்தாத ஜென்மம் எனத் தீர்மானிப்பதா?**

– எந்த மனிதர் குறித்து இத்தனைப் பீடிகை என்பது சொல்லாமலே புரிந்திருக்கும். இத்தனை குணங்களுக்கும் ஒற்றை உதாரணமாக நடமாடிக் கொண்டிருக்கிறார் நமது ஆளுநர் ரவி! அவருடைய சேட்டைகளுக்கு அளவே இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது.



**சில குரூர புத்திக் கொண்டவர்கள் திடீரென அம்பேத்கர் சிலையில் தார் பூசுவார்கள். இன்னும் சில சின்னப் புத்தியினர் தந்தை பெரியார் சிலைக்கு கருப்பு வண்ணம் அடிப்பார்கள். இன்னும் சில சிறுமதியாளர்களை அண்ணா, வள்ளுவர் சிலைகளுக்கு காவித் துண்டு அணிவிப்பார்கள்! –**

**இப்படி மூளை வளர்ச்சியற்றவர்கள் இரவோடு இரவாக செயல்படுவர்! பிடிபட்ட பின் அதில் சிலர் மன நலம் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பர் – இன்னும் பலர் அறிவு முதிர்ச்சி அற்றவர்களாக விளங்குவர். இப்படி செய்திகள் அவ்வப்போது ஏடுகளில் வரும்!**

அத்தகைய செயல்களில் ஈடுபடுவோரை மிஞ்சிடும் வகையில் வள்ளுவருக்கு நமது ஆளுநர் காவி வண்ணம் பூசி, நெற்றிகை கால்களெல்லாம் விபூதிப் பட்டைகளை அணிவித்து, அந்தப் படத்தை வைத்து தனது மனைவி சகிதம் அதற்கு மலர் தூவி மரியாதை செலுத்தியுள்ளார்!

இதே ஆளுநர் அவரது மனைவி மற்றும், ஒன்றிய இணை அமைச்சர் முருகன் உடனிருக்க, ஓவிய மேதை திரு. கே. ஆர். வேணுகோபால் சர்மா பல ஆண்டுகள் ஆராய்ந்து, சிந்தித்து, பெரும் தமிழறிஞர்கள் அங்கீகாரத் துடன் வரைந்து அளித்து, தமிழ்நாடு அரசால் ஏகமனதாக ஏற்கப்பட்ட வள்ளுவர் படத்துக்கு; முந்தைய வள்ளு வர் தினத்தன்று மரியாதை செலுத்தியுள்ள நிலையில், ஏன்; தற்போது திடீர் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதைச் சிந்திக்கும் போது, ஆளுநர் மனநிலையில் இப்படி அடிக்கடி ஏற்படும் தடுமாற்றங்கள் குறித்து சராசரி மனிதன் சந்தேகம் கொள்வது இயற்கைதானே!

வள்ளுவர் தினத்தன்று வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடி அவர்கள், "திருக்குறளில் உள்ள வள்ளுவரின் ஆழ்ந்த ஞானம் வாழ்க்கையில் பல அம்சங்களில் நமக்கு வழி காட்டுகிறது. காலத்தால் அழியாத அவரது போதனைகள் நல்லொழுக்கம் மற்றும் நேர்மையில் கவனம் செலுத்த சமூகத்தை ஊக்குவிக்கிறது. **நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வு கொண்ட உலகத்தை உருவாக்குகிறது. அவர் எடுத்துரைத்த அனைவருக்குமான விழுமியங்களைத் தழுவுவதன் மூலம் அவரது தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றிடுவோம்".**




– எனச் சரியான புரிந்துணர்வோடு வள்ளுவருக்கு எந்தவித மதச்சாயமும் பூசாமல் வள்ளுவர் தின வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ள நிலையில், நமது ஆளுநர் மட்டும் வள்ளுவர் குறித்து சரியான புரிதல் இன்றி அரைவேக்காட்டுத்தனத்தோடு வள்ளுவரை அணுகியுள்ளார் என்பதை அவரது வள்ளுவர் தின வாழ்த்துச் செய்தி எடுத்துக் காட்டுகிறது!

"பாரதிய சனாதனப் பாரம்பரியத்தின் பிரகாசமான துறவி" – என வலிந்து 'வள்ளுவர்' எனும் பெருமலையை சனாதன 'நூல்' கட்டி தனது பக்கம் இழுக்க முயற்சி செய்துள்ளார்! வள்ளுவர் படத்துக்குக் காவி வண்ணம் மட்டும் பூசவில்லை கவர்னர் ரவி; அவரது வாழ்த்துச் செய்தியில் வர்ணாசிரமத்தையும் புகுத்தியுள்ளார்!

ஆம்; மொழி, இனம், காலம், நாடு, மதம் கடந்து வாழ்வோடு, வாழ்வியலோடு பொருந்திக் கிடக்கும் குறள் படைத்த அய்யனை, கொச்சைப்படுத்தும் வகையில், அவருக்குக் காவிச் சாயம் பூசி, பட்டை தீட்டி, பாரதிய சனாதனத்தை பரப்பிவிட்டதாகப் பரவசம் கொண்டுள்ளார் ஆளுநர்!

எத்தனை சூடுபட்டாலும் திருந்தாது திரும்பத் திரும்பத் தனது வக்ரத்தனத்தைக் காட்டிக் கொண்டே இருக்கும் இவரை; இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள எந்தவகை மனிதராக எண்ணுவது?

சொம்புக்குள் தலையை விட்டு, அந்தச் சொம்பு தலையில் மாட்டிக்கொண்டபின் அதிலிருந்து தலையை விடுவித்துக் கொள்ள வகையும் வழியும் தெரியாது தவித்திடும் பூனையைப் போல பல நேரங்களில் ஆளுநர் ரவி, தான் வகிக்கும் பதவியின் பெருமையைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டுக்கு ஆளுநராக வந்தபின் அவர் நடத்திடும் அலப்பறைகளுக்கு அளவே இல்லாமல் போய்க்கொண்டிருப்பதைக் கண்டு கொண்டிருக்கிறோம்!

**ஆளும் அரசியல் கட்சியோடு மட்டுமல்ல; தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களின் உணர்வுக்கும், தமிழ்க் கலாச்சாரத்துக்கும் எதிராக அவர் ஏதாவது ஒரு வகையில் போர் தொடுப்பதைத் தனது இலட்சியமாகக் கொண்டு செயல்படுகிறார்!**

**'தமிழ்நாடு' என்ற பெயருக்கு எதிராக மூக்கை நுழைத்துவிட்டு எல்லாத் திக்கிலிருந்தும் எதிர்பட்ட எதிர்ப்பால் மூக்குடை பட்டார்!**

ஆளுநருக்குத் தரப்பட்ட அதிகாரம், அங்கீகாரம் இவற்றை மீறி செயல்பட நினைத்து, தனது சாதுர்யத்தைக் காட்டுவதாக எண்ணி சட்டப்பேரவையில் அவருக்கு அரசு எழுதி அளித்த உரையில் இடைச்செருகல்கள் நடத்தியும், சிலவற்றை விடுத்தும் பேசி – அத்துமீறி நடந்த போது முதலமைச்சர் தளபதி தந்த எதிர்தாக்குதலை எதிர்கொள்ள இயலாது சட்டமன்றத்தைவிட்டு ஓட்டமும்நடையுமாக வெளியேறினார்.

**தனது பெயருக்குப் பின்னால் 'ஐ.பி.எஸ்.' என்ற பட்டத்தைப் பதித்திருப்பவராயிற்றே; விவரங்களைப் புரிந்து கொண்டு 'தனது ஆட்டம் தமிழ்நாட்டில் செல்லாது' என முடிவெடுத்து, தனது அதிகார வரம்புக்குள் அடங்கி செயல்படுவார் என எண்ணினோம். ஆனால் அவரது தொடர் நடவடிக்கைகள் அவரை திருந்தும் ஜென்மமாகக் காட்டிடவில்லை.**

'உச்சநீதிமன்றம் தொடர்ந்து குட்டிடும் குட்டுகளால் கூனிக் குறுகிப் போயிருப்பார்; இனி எல்லை மீறமாட்டார்' என்ற பலரது நினைப்பினையும் நிராசையாக்கிக் கொண்டிருக்கிறார்!




இப்போது அய்யன் திருவள்ளுவருக்குக் காவி வண்ணம் பூசி, **"பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும்...."** எனக் குறள் படைத்த அந்தக் கோமானை, வருணாசிரமத்துக்குள் வளைத்துப் போட முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

ஆரியத்தின் ஆணவம், அகங்காரம், அத்துமீறல் அத்தனையையும் எதிர்கொண்டு; அந்த ஆரியத்தையே அடிபணிய வைத்து ஆட்சிபீடம் ஏறியது திராவிடக் கொள்கைகள். இதனை ஆளுநர் ரவியால் மட்டுமல்ல; அவருக்குத் துணை போகும் ஆரிய அடிவருடிகளாகத் திகழும் கோடாரிக் காம்புகளாலும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது!

**வருணாசிரமக் கொள்கைகளால் குட்டக்குட்டக் குனிந்து, புழுவாய், புன்மைத் தேரையாய் அடங்கி ஒடுங்கிப் புதைந்து கிடந்த தமிழினத்தை; அதன் தன்மான உணர்வைத் தட்டி எழுப்பிய தந்தை பெரியாரின் பூமி இது!.**

**மூடிக்கிடந்த தமிழ்ச் சமுதாயத்தின் விழிகளைத் திறந்து, அறிவாசான் அண்ணா வார்த்தெடுத்த அடலேறுகளைக் கொண்ட மண் இந்தத் தமிழ் மண்!**

**தந்தை பெரியார் சுடரேற்றித் தந்த சுயமரியாதை தீபத்தை தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சுடர்விடச் செய்ய ஓய்வறியாது உழைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அறிவுச்சுடர் ஏற்றிய அறிவுசார் நிலம் இந்தத் தமிழ் நிலம்!**

இங்கே, ஆளுநர் ரவி மட்டுமல்ல; அவரது எஜமானர்கள் ஆட்டமெல்லாம் வேகாது! மேலும் தெளிவுபெற திராவிட இயக்க வரலாற்றைப் படித்துணர்ந்தால் இங்கே பலரின் நரித்தனங்களின் வாலறுக்கப்பட்ட விவரங்களை ஆளுநர் ரவி போன்றோரால் உணர முடியும்!



விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் சமத்துவப் பொங்கல் விழாவில் கழகக் கொடியேற்றி, கழகத்தினர் மற்றும் பொதுமக்களுடன் சமத்துவ பொங்கலிட்டு தமிழர் திருநாளை கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி கொண்டாடினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ,, திருமதி விசாலாட்சி பொன்முடி, ம ஜெயச்சந்திரன், இரா.ஜனகராஜ், செ. புஷ்பராஜ், அன்னியூர் சிவா, இரா. சக்கரை, தமிழ்ச்செல்விபிரபு, சித்திக் அலி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில் பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவை சார்பில் 50ஆம் ஆண்டு பொன்விழா நிகழ்ச்சி, பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்றது. இதில் மேனாள் ஒன்றிய அமைச்சரும் கழக துணைப் பொதுச்செயலாளருமான ஆஇராசா.எம்.பி.கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.இதில் மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அட்சயகோபால், பொதுக்குழு உறுப்பினர் கி.முகுந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டம் சார்பில் - சேலம் மாநில உரிமை மீட்பு மாநாட்டுக்கு

# 10,000 இளைஞர்கள் கலந்துகொள்ளும் விவரப் பட்டியல்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், ஜன.20-

சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் கலந்து கொள்வதற்கு கடலூர் கிழக்கு மாவட்டம் சார்பில் 10000 இளைஞர்கள் கலந்துகொள்ளும் விவரப் பட்டியல் குறித்து மாவட்டச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதல மைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டம் செயலாக்கத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஜனவரி 21 சேலம் பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு மாநில உரிமை மீட்பு முழக்கம் மாநாட்டில் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. - இளைஞர் அணி சார்பில், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட ஊராட்சி, வட்டம், வார்டு வாரியாக 10000 (பத்தாயிரம்) இளைஞர்கள் கலந்து கொள்ளும் பெயர் பட்டியல் மற்றும் எண்ணிக்கை, ஒன்றியம் வாரியாக

காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றியம் 391 நபர்கள், காட்டுமன்னார் கோவில் மேற்கு ஒன்றியம் 413, குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் 449 நபர்கள், குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் 851 நபர்கள், திருமுட்டம் கிழக்கு ஒன்றியம் 343 நபர்கள், திரு முட்டம் மேற்கு ஒன்றியம் 168 நபர்கள், திருமுட்டம் வடக்கு ஒன்றியம் 239 நபர்கள், கடலூர் கிழக்கு ஒன்றியம் 358 நபர்கள்,

கடலூர் மேற்கு ஒன்றியம் 260 நபர்கள், கடலூர்



வடக்கு ஒன்றியம் 500 நபர்கள், கடலூர் தெற்கு ஒன்றியம் 250 நபர்கள், புவனகிரி கிழக்கு ஒன்றியம் 259 நபர்கள், புவனகிரி மேற்கு ஒன்றியம் 273 நபர்கள், கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம் 258 நபர்கள், கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம் 206 நபர்கள், கம்மாபுரம் வடக்கு ஒன்றியம் 210 நபர்கள், கம்மாபுரம் தெற்கு ஒன்றியம் 180 நபர்கள், கம்மாபுரம் மத்திய ஒன்றியம் 150 நபர்கள், பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றியம் 253 நபர்கள், பரங்கிப் பேட்டை தெற்கு ஒன்றியம் 273 நபர்கள்,

குமராட்சி கிழக்கு ஒன்றியம் 200 நபர்கள், குமராட்சி மேற்கு ஒன்றியம் 63 நபர்கள், குமராட்சி வடக்கு ஒன்றியம் 200 நபர்கள், குமராட்சி தெற்கு ஒன்றியம் 119 நபர்கள் குமராட்சி மத்திய ஒன்றியம் 171 நபர்கள்,

கடலூர் மாநகரம் மாநகரம் பகுதி வாரியாக மஞ்சக்குப்பம பகுதி 202 நபர்கள், புதுப்பாளையம் பகுதி 165 நபர்கள், திருப்பாப்புலியூர் பகுதி 141 நபர்கள், துறைமுகம் பகுதி 238 நபர்கள், நகரம் வாரியாக சிதம்பரம் நகரம் 366 நபர்கள், வடலூர் நகரம் 360 நபர்கள், பேரூர் வாரியாக காட்டுமன்னார்கோவில் பேரூர் 233 நபர்கள், குறிஞ்சிப்பாடி பேரூர் 351 நபர்கள், திருமுட்டம் பேரூர் 119 நபர்கள்,

புவனகிரி பேரூர் 95 நபர்கள், சேத்தியாதோப்பு பேரூர் 105 நபர்கள், கெங்கைகொண்டான் பேரூர் 52 நபர்கள், பரங்கிப் பேட்டை பேரூர் 109 நபர்கள், கிள்ளை பேரூர் 248 நபர்கள், அண்ணாமலைநகர் பேரூர் 119 நபர்கள், லால்பேட்டை பேரூர் 60 நபர்கள் ஆக மொத்தம் 10000 (பத்தாயிரம்) இளைஞர்கள் மட்டும் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநாட்டில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், இளைஞர்கள் அனைவரும் நாளை (21.01.2024 - ஞாயிற்றுக் கிழமை) காலை 8.00 மணி சேலம், பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு, மாநில உரிமை மீட்பு முழக்கம் மாநாட்டில் பெருந்திரளாக கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; ஒன்றிய அரசின் நிதியை என்ன செய்தீர்கள் என்று ஆளுநர் ரவி கணக்கு கேட்பதாக ஒரு பத்திரிக்கை செய்தி வெளியிட்டுள்ளதே?

**போண்டி :** ஆமாய்யா; **தமிழ்நாட்டு ஆளுநர் என்று சம்பளம் வாங்கி சொகுசு அனுபவிக்கும் ரவி, தமிழ்நாட்டுக்கு என்ன செய்தார்? ஒன்றிய அரசிடம் இருந்து எத்தனை கோடி நிதி வாங்கிக் கொடுத்தார்?என்று நாம் கேட்போமா?**

### சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2வது மாநாட்டில்

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை.ஜன.20-

வரலாற்றுச்சிறப்புமிக்க இளைஞர் அணி 2வது மாநில மாநாடு சேலத்தில் நாளை (21.01.2024 - ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகின்றது. இம் மாநாட்டில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர் என்று மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக மாநில இளைஞரணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நாளை (21ஆம் தேதி) சேலத்தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநாடு நடைபெற உள்ளது.

இந்த மாநாடு தமிழ் நாட்டில் இதுவரை நடைபெற்ற அனைத்து மாநாட்டினையும் மிஞ்சும் வகையில் நடை பெற உள்ளது. இந்த மாநாடு, நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலின் வெற்றிக்கு அடித்தளமாக அமையும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை. வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும் வகையில் சிறப்பான முறையில் திருப்புமுனை மாநாடாக இது அமையும்.

இந்த மாநாடு குறித்து கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அன்பு அழைப்பு விடுத்த வேண்டுகோளில்,

"நம் மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தி கன்னியாகுமரியில் தொடங்கி வள்ளுவர் பெரியார் அண்ணா கலைஞர் மண்டலம் என தமிழ்நாடு முழுவதும். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி வாரியாக இளைஞர் அணி



யினர் 234 தொகுதிகளிலும் கருப்பு சிவப்பு உடைய ணிந்த இளைஞரணித் தோழர்களின் இருசக்கர வாகன அணிவகுப்பு நடந்தது.

இதற்கிடையில், நம் கழகம் சார்பாக நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க வலியுறுத்தி 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற்று அதனை சேலம் மாநாட்டில் நம் கழகத் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று திட்டமிட்டோம். ஆனால், தேனீயைக் காட்டிலும் சுறுசுறுப்பான நமது தோழர்களின் அயராத உழைப்பால் 80 லட்சம் கையெழுத்துகளையும் கடந்து, மேலும் தொடர்ந்து கையெழுத்துகள் குவிந்த வண்ணம் உள்ளன. இது தான், போர்க்களத்துக்கு தமது வீரர்களை ஒரு தளபதி தயார்ப்படுத்தும் முறை. அதனை நமது தலைவர் அவர்கள், கச்சிதமாக செய்கிறார்கள். இதே தயாரிப்போடு தான் சேலம் இளைஞர் அணி மாநில மாநாடு கழகத்தின் கொள்கைத்திருவிழாவாக நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமன்றி, இந்திய ஒன்றிய அரசியலின் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கப் போகிறது இந்த மாநாடு.

இளைஞர் அணித் தோழர்களே! வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாட்டுக்குப் புறப்படத்தயாராவீர். நமது உயிருடன் கலந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் 1981ஆம் ஆண்டு இதே சேலம் ஆத்தூரில் தந்தை பெரியாரின் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய பேருரையில்,"ஓர் இயக்கத்தை வளர்த்தவர்கள், அந்த இயக்கத்தோடு சேர்ந்து வளர்ந்திருப்பவர்கள் அந்த இயக்கத்திற்குப் புதிய இரத்தம் வர வேண்டும் என்று விரும்புகிறவர்கள் அப்படி வருகின்ற புதிய இரத்தங்களை அரவணைத்து இளைய தலைமுறையினருடைய உள்ளங்களிலே இயக்கத்தினுடைய இலட்சியங்களைப் பதியவைக்கின்ற பணியிலே ஈடுபடுவதும், வருகின்ற இளைய தலைமுறையும் பழைய தலைமுறை பட்டபாட்டினால் அல்லவா இந்தப் பலன் நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது என்று பழைய தலைமுறைக்கு மதிப்பளித்துக் காரியமாற்றவும் , இந்த இயக்கம் நடைபோட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆவலாகும்" என்று சொன்னார்.

கலைஞர் அவர்களின் அந்த ஆவலை நிறை வேற்றும் வகையில் அதே சேலம் ஆத்தூரில் நமது மாநாடு அமைய வேண்டும். புதிய ரத்தம் பாய்ச்சவும், இயக்கத்தின் இலட்சியங்களை அவர்கள் மனதில் பதிய வைக்கவும், மூத்தத் தலைவர்களின் வழிகாட்டுதல் படி நடக்கவும் உறுதியேற்கத் தான் நம் இளைஞரணியின் மாநில மாநாடு! உங்கள் ஒவ்வொருவரையும் மாநாட்டுப் பந்தலில் என் கண்கள் தேடும்.

தமிழ்நாட்டை மட்டுமல்ல ஒட்டு மொத்த இந்தியாவையும் காக்க" என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று, சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் நாளை (21.1.2024) காலை 8 மணிக்கு நமது புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள். தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞரணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய கவுன்சிலர்கள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர திமுக சார்பாக, கும்பகோணம் மாநகராட்சி, அய்யப்பன் நகரில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில், நமது கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். நிகழ்ச்சியில், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயரும், மாநகர திமுக செயலாளருமான சு.ப.தமிழழகன், கும்பகோண மத்திய ஒன்றிய தி.மு.க. செயலாளருமான தி.கணேசன் , கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஜெ.சுதாகர் , தலைமை செயற்குழு உறுப்பினரும், மாநகராட்சி பொது சுகாதாரக்குழு தலைவருமான குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி , மாநகரக் கழக நிர்வாகிகள் சு.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், எஸ்.சிவானந்தம், டி.செந்தாமரை, எஸ்.ரவிச்சந்திரன், பகுதி கழக செயலாளர்கள் இரா.செல்வராஜ், இரா.கல்யாணசுந்தரம், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, மு.கண்ணன், மண்டல குழுத் தலைவர்கள் ஜெ.மனோகரன், பாபு (எ) இரா. நரசிம்மன், டி.ஆர்.அனந்தராமன், ஆர்.முருகன் உள்ளிட்ட அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.



மறைந்த கீரை. தமிழ்ச்செல்வன் அவர்களின் 89 வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகம் , பெரியண்ணன் மாளிகையில் , கீரை.தமிழ்ச்செல்வன் அவைக்கூடத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் கழகத்தினர் கலந்துகொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கோட்டூர் ஜப்பார்**
**சனவரி 20 (2020)**




**தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.**

**ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டப் பிரதிநிதியாகவும், கோட்டூர் ஒன்றியப் பொறுப்பாளராகவும், நாகை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**ஊராட்சி மன்றத் தலைவராகவும், புத்தகரம் கூட்டுறவு சங்க தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் மற்றும் தலைமை அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.1.2024) தலைமைச் செயலகத்தில், பாங்க் ஆப் பரோடா வங்கியின் பொது மேலாளர் மற்றும் மண்டல தலைவர் சரவண குமார், துணை பொது மேலாளர்கள் ராமானுஜ் சர்மா, நிர்மல் குமார் பட்டேல், சுரேஷ் கஜேந்திரன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 80 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.1.2024) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் திருமதி.அ.வெண்ணிலா எழுதிய "நீரதிகாரம்" புத்தகத்தை வெளியிட்டார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, புத்தகத்தின் ஆசிரியர் திருமதி அ. வெண்ணிலா மற்றும் அவரது குடும்பத்தினர், எழுத்தாளர்கள் ஏ.எஸ். பன்னீர்செல்வம், இமயம், விகடன் குழுமத்தின் பொது மேலாளர் அப்பாஸ் அலி ஆகியோர் உள்ளனர்.







தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.1.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 108 அவசர கால ஊர்திகளின் சேவைகளை மேம்படுத்தும் வகையில் 14 கோடியே 73 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 75 புதிய ஊர்திகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கும் விதமாக, ஓட்டுநர்களிடம் அவ்வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மைதிலி கே. ராஜேந்திரன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்ட இயக்குநர் / உறுப்பினர் செயலர் டி.என். ஹரிஹரன், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் எம். கோவிந்த ராவ், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.ஏ. சண்முககனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.1.2024) தலைமைச் செயலகத்தில், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் சிகிச்சை உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 59 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மைதிலி கே.ராஜேந்திரன், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் எம். கோவிந்த ராவ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் செயல்படும் இயக்கங்களின் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது. ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 55 வகையான முன்னெடுப்புகளின் செயல்பாடுகள் குறித்தும், ஆசிரியர் சங்கங்களின் குறைதீர் கூட்டங்களை மாவட்ட அளவில் நடத்துவது குறித்தும், அடுத்த ஆண்டிற்கான விலையில்லா பொருட்களைக் குறித்த நேரத்தில் விநியோகம் செய்வது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் குமரகுருபரன் பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் அறிவொளி ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.1.2024) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சந்தித்து, ஒன்றிய அரசின் ஸ்டார்ட் அப் இந்தியா வெளியிட்ட 2022 ஆம் ஆண்டிற்கான தரவரிசைப்பட்டியலில் சிறந்த புத்தொழில் சூழமைவினை (Startup Ecosystem) கட்டமைக்கும் மாநிலங்களில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட முதல் தர வரிசை பிரிவிற்கான Best Performer சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் இயக்க இயக்குநர் சிவராஜா ராமநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2 வது மாநில மாநாட்டில்

# நாகை மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!

நாகை, ஜன. 20 - வரலாற்றுச்சிறப்புமிக்க இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு சேலத்தில் வரும் 21.1.2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது. இம் மாநாட்டில் நாகை மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர் என்று மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கேட்டுக் கொண்டுள்ளார்.



நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என். கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

கழக மாநில இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் தலைமையில் வரும் 21.1.2024 அன்று சேலத்தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாடு தமிழ் நாட்டில் இதுவரை நடைபெற்ற அனைத்து மாநாட்டினையும் மிஞ்சும் வகையில் நடைபெற உள்ளது. இந்த மாநாடு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கழக வெற்றிக்கு உறுதுணையாக அமையும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை.

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும் வகையில் சிறப்பான முறையில் திருப்பு முனை மாநாடாக இது அமைய உள்ளது. இந்த மாநாடு குறித்து கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் அன்பு அழைப்பு விடுத்த வேண்டுகோளில் நம் மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தி கன்னியாகுமரியில் தொடங்கி வள்ளுவர், பெரியார், அண்ணா, கலைஞர் மண்டலம் என தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு சட்ட மன்ற தொகுதி வாரியாக 234 தொகுதிகளிலும் கருப்பு, சிவப்பு உடையணிந்த இளைஞர் அணித் தோழர்கள் இருச்சக்கர வாகன அணிவகுப்பு நடத்தினார்கள். இதற்கிடையில் நம் கழகம் சார்பாக நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசு தலைவர் ஒப்புதல் அளிக்க வலியுறுத்தி 50 லட்சம் கையெழுத்துக்களை பெற்று அதன் சேலம் மாநாட்டில் நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று திட்டமிட்டோம். ஆனால் தேனீயைக் காட்டிலும் சுறுசுறுப்பான நமது கழகத் தோழர்கள் அயராத உழைப்பால் 80 லட்சம் கையெழுத்துகளையும் கடந்து மேலும் தொடர்ந்து கையெழுத்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். இது தான் போர்களத்திற்கு தமது வீரர்களை ஒரு தளபதி தயார்படுத்தும் முறை அதனை நமது தலைவர் அவர்கள் கச்சிதமாக செய்கிறார்கள். இதே தயாரிப்போடு தான் சேலம் இளைஞர் அணி மாநில மாநாடு கழகத்தின் கொள்கைத் திருவிழாவாக நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமின்றி வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கப் போகிற இந்த மாநாட்டுக்கு இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ளன. எனதருமை இளைஞர் அணித் தோழர்களே! வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாநாட்டுக்குப் புறப்படத் தயாராவீர்.

நமது உயிருடன் கலந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1981ம் ஆண்டு இதே சேலத்தில் ஆத்தூரில் தந்தை பெரியாரின் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய பேருரையில் இந்த இயக்கத்தை வளர்த்தவர்கள், அந்த இயக்கத்தோடு சேர்ந்து வளர்ந்திருப்பவர்கள், அந்த இயக்கத்திற்குப் புதிய இரத்தம் வர வேண்டும் என்று விரும்புகிறவர்கள், அப்படி வருகின்ற புதிய இரத்தங்களை அரவணைத்து இளைய தலைமுறையினருடைய உளளங்களிலே இயக்கத்தினுடைய இலட்சியங்களைப் பதிய வைக்கின்ற பணியிலே ஈடுபடுவதும், வருகின்ற இளைய தலைமுறையினருடைய உள்ளங்களிலே இயக்கத்தினுடைய இலட்சியங்களைப் பதியவைக்கின்ற பணியிலே ஈடுப்படுவதும், வருகின்ற இளைய தலைமுறையும், பழைய தலைமுறை பட்ட பாட்டினால் அல்லவா இந்தப் பலன் கிடைத்திருக்கிறது. என்று பழைய தலைமுறைக்கு மதிப்பளித்து காரிய மாற்றவும் இந்த இயக்கம் நடைபோட வேண்டும் என்பது தான் என்னுடைய ஆவலாகும் என்று சொன்னார்கள்.

கலைஞர் அவர்களின் ஆவலை நிறைவேற்றும் வகையில் அதே சேலத்தில் நமது இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு அமைய வேண்டும். புதிய ரத்தம் பாய்ச்சவும், இயக்கத்தின் இலட்சியங்களை அவரவர் மனதில் பதிய வைக்கவும் மூத்தத் தலைவர்களின் வழிகாட்டுதல் படி நடக்கவும் உறுதியேற்கத்தான் நம் இளைஞர் அணியின் மாநில மாநாடு! உங்கள் ஒவ்வொருவரையும் என் கண்கள் தேடும் . தமிழ்நாட்டை மட்டுமல்ல; ஒட்டு மொத்த இந்தியாவைக் காக்க என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏனவே கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று சேலம் பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் இளைஞர் அணியின் 2 வது மாநில மாநாடு வரும் 21.1.2024 அன்று காலை 8.00 மணிக்கு நமது நாகை மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வகிகள், கிளை, வார்டு கழக நிர்வகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகமூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், அனைவரும் கலந்து கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கழக இளைஞர் அணியினர் சேலம் மாநாட்டில் வெண்சீருடையில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். நாகை மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் இளைஞர் அணியின் சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி 2 வது மாநில மாநாட்டில் வெண் சீருடையுடன் பங்கேற்க ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முழு கவனம் செலுத்தி இளைஞர் அணியினர் மாநாட்டில் கலந்து கொள்ள செய்திட வேண்டும். இவ்வாறு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2 வது மாநில மாநாட்டில்

# மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வேண்டுகோள்!

மயிலாடுதுறை, ஜன. 20 - வரலாற்று சிறப்புமிக்க இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு சேலத்தில் வரும் 21.1.2024 ஞாயிற்றுக் கிழமை அன்று நடைபெறுகின்றது. இம் மாநாட்டில் மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர் என்று மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கேட்டுக் கொண்டுள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. கழக மாநில இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் தலைமையில் நாளை (21.1.2024 ) சேலத்தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற உள்ளது.

இந்த மாநாடு தமிழகத்தில் இதுவரை நடைபெற்ற அனைத்து மாநாட்டினையும் மிஞ்சும் வகையில் நடைபெற உள்ளது. இந்த மாநாடு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் கழக வெற்றிக்கு உறுதுணையாக அமையும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை. வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும் வகையில் சிறப்பான முறையில் திருப்புமுனை மாநாடாக இது அமைய உள்ளது. இந்த மாநாடு குறித்து கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் அன்பு அழைப்பு விடுத்த வேண்டுகோளில் நம் மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தி கன்னியாகுமரியில் தொடங்கி வள்ளுவர், பெரியார், அண்ணா, கலைஞர் மண்டலம் என தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு சட்ட மன்ற தொகுதி வாரியாக 234 தொகுதிகளிலும் கருப்பு, சிவப்பு உடையணிந்த இளைஞர் அணித் தோழர்கள் இருச்சக்கர வாகன அணிவகுப்பு நடத்தினார்கள். இதற்கிடையில் நம் கழகம் சார்பாக நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசு தலைவர் ஒப்புதல் அளிக்க வலியுறுத்தி 50 லட்சம் கையெழுத்துக்களை பெற்று அதன் சேலம் மாநாட்டில் நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று திட்டமிட்டோம். ஆனால் தேனீயைக் காட்டிலும் சுறுசுறுப்பான நமது கழகத் தோழர்கள் அயராத உழைப்பால் 80 லட்சம் கையெழுத்துகளையும் கடந்து மேலும் தொடர்ந்து கையெழுத்துகள் குவிந்த வண்ணம் உள்ளனர். இது தான் போர்களத்திற்கு தமது வீரர்களை ஒரு தளபதி தயார்படுத்தும் முறை அதனை நமது தலைவர் அவர்கள் கச்சிதமாக செய்கிறார்கள். இதே தயாரிப்போடு தான் சேலம் இளைஞர் அணி மாநில மாநாடு கழகத்தின் கொள்கைத் திருவிழாவாக நடைபெறவுள்ளது. .தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமின்றி வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கப் போகிற இந்த மாநாட்டுக்கு இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ளன. எனதருமை இளைஞர் அணித் தோழர்களே! வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாநாட்டுக்குப் புறப்படத் தயாராவீர். நமது உயிருடன் கலந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1981ஆம் ஆண்டு இதே சேலத்தில் ஆத்தூரில் தந்தை பெரியாரின் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய பேருரையில் இந்த இயக்கத்தை வளர்த்தவர்கள், அந்த இயக்கத்தோடு சேர்ந்து வளர்ந்திருப்பவர்கள், அந்த இயக்கத்திற்குப் புதிய இரத்தம் வர வேண்டும் என்று விரும்புகி றவர்கள், அப்படி வருகின்ற புதிய இரத்தங்களை அரவணைத்து இளைய தலைமுறையினருடைய உளளங்களிலே இயக்கத்தினுடைய இலட்சியங்களைப் பதிய வைக்கின்ற பணியிலே ஈடுபடுவதும், வருகின்ற இளைய தலைமுறையினருடைய உள்ளங்களிலே இயக்கத்தினுடைய இலட்சியங்களைப் பதியவைக்கின்ற பணியிலே ஈடுபடுவதும், வருகின்ற இளைய தலைமுறையும், பழைய தலைமுறை பட்ட பாட்டினால் அல்லவா இந்தப் பலன் கிடைத்திருக்கிறது. ஏன்று பழைய தலைமுறைக்கு மதிப்பளித்து காரிய மாற்றவும் இந்த இயக்கம் நடைபோட வேண்டும் என்பது தான் என்னுடைய ஆவலாகும் என்று சொன்னார்கள். இந்த கலைஞர் அவர்களின் ஆவலை நிறைவேற்றும் வகையில் அதே சேலத்தில் நமது இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு அமைய வேண்டும். புதிய ரத்தம் பாய்ச்சவும், இயக்கத்தின் இலட்சியங்களை அவர்வர் மனதில் பதிய வைக்கவும் மூத்தத் தலைவர்களின் வழிகாட்டுதல் படி நடக்கவம் உறுதியேற்கத்தான் நம் இளைஞர் அணியின் மாநில மாநாடு! உங்கள் ஒவ்வொருவரையும் என் கண்கள் தேடும் . தமிழ் நாட்டை மட்டுமல்ல ஒட்டு மொத்த இந்தியாவைக் காக்க என்று குறிப்புட்டுள்ளார்.

எனவே கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று சேலம் பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் இளைஞர் அணியின் 2 வது மாநில மாநாடு நாளை (21.1.2024 ) காலை 8.00 மணிக்கு நமது மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், அனைவரும் கலந்து கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கழக இளைஞர் அணியினர் சேலம் மாநாட்டில் வெண் சீருடையில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் இளைஞர் அணியினர் சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி 2 வது மாநில மாநாட்டில் வெண் சீருடையுடன் பங்கேற்க ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முழு கவனம் செலுத்தி இளைஞர் அணியினர் மாநாட்டில் கலந்து கொள்ள செய்திட வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.


21.01.2024
கழக இளைஞரணி மாநாட்டில் சிறப்புரையாற்ற வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்
கழகத்தலைவர்
அவர்களே
கழக இளைஞரணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
இளம்தலைவர்
அவர்களே
வருக! வருக!!
கே.என்.நேரு
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்
எஸ்.ஆர்.சிவலிங்கம்
சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
அழைப்பில் மகிழும்
பாரப்பட்டி க.சுரேஷ்குமார் சேலம் கிழக்கு மாவட்ட கழக துணை செயலாளர்
Touch Creations
96260 11104

# சேலம் செல்ல நான் தயாராகிவிட்டேன்!

# நீங்களும் தயாராகிவிட்டீர்களா?

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

‘**நெ**ருப்பின் பொறிகளே! நீங்கள் தான் தேவை!– என்று சொன்னார் தமிழினத் தலைவர் கலைஞர்!

அத்தகைய கனல் தெறிக்கும் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே!

இளைஞரணியின் எழுச்சிமிகு இரண்டாவது மாநாடு சேலத்தில் சனவரி 21–ஆம் நாள் நடைபெற இருக்கிறது.

சேலத்துக்கு வர நான் தயாராகிவிட்டேன். நீங்கள் தயாராகிவிட்டீர்களா?

**என்னைப் பார்க்கும்போது உங்களுக்குள் எப்படி ஒரு உற்சாகமும் புத்தெழுச்சியும் பிறக்கிறதோ...**

**அதேபோல் உங்களைப் பார்க்கும் போது எனக்குள்ளும் உற்சாகமும் – புத்தெழுச்சியும் பிறக்கிறது!**

**கழக உடன்பிறப்புகளான உங்களின் முகங்களைப் பார்ப்பதும் –**

**நீங்கள் எழுப்பும் கொள்கை முழக்கங்களைக் கேட்பதும்தான் – எனக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தரும் விஷயங்கள்!**

இன்று நேற்று அல்ல; 1980–இல் இருந்தே இது எனக்குப் பழக்கமாகி விட்டது!

எப்போது தலைவர் கலைஞரும் இனமானப் பேராசிரியரும் இளைஞரணியை உருவாக்கி, என்னிடம் ஒப்படைத்தார்களோ, அன்றில் இருந்து, தொண்டனுக்குத் தொண்டனாக, உடன்பிறப்புகளுக்கு உடன்பிறப்பாகத் தான் செயல்பட்டு வருகிறேன்

இன்றைக்குக் கூட, கழகத் தலைவராக அல்ல, தலைமைத் தொண்டனாகத்தான் செயல்படுகிறேன்.

கொள்கை உறவு உடன்பிறப்புகளின் மாநாடுதான் சேலம் மாநாடு.

2007–ஆம் ஆண்டு திக்கெட்டும் புகழும் திருநெல்வேலிச் சீமையில் இளைஞரணியின் முதல் மாநாட்டை நான் தலைமை வகித்து நடத்திக் காட்டினேன்.

இப்போது 2024–ஆம் ஆண்டு சீர்மிகு சேலத்தில் இளைஞரணியின் இரண்டாவது மாநாட்டை இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி அவர்கள் சிறப்போடு ஏற்பாடு செய்து நம்மை எல்லாம் அழைத்திருக்கிறார்.



**இளைஞரணி மாநாட்டின் நோக்கம் மாநில உரிமைகளை வென்றெடுப்பது என்று இளைஞரணிச் செயலாளர் உதயநிதி திட்டமிட்டிருக்கிறார். மாநில உரிமைகளைக் காப்பதுதான் இந்தியாவைக் காப்பது! அந்த வகையில் ‘இளைஞரணி மாநாடு, இந்தியாவின் மாநாடு’ என்று சொல்லத்தக்க வகையில் பிரமாண்டமாக நடக்க இருக்கிறது.**

இந்திய நாடு நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. தேர்தலுக்குப் பிறகு அமைய இருக்கும், இந்தியா கூட்டணியின் ஆட்சி, மாநில உரிமைகளை மதிக்கிற ஆட்சியாக அமைய வேண்டும்; அமையும்!

இதற்கெல்லாம் தொடக்க மாநாடாகச் சேலம் மாநாடு அமையப் போகிறது.

**எனது உடன்பிறப்புகளே! கழக உடன்பிறப்புகளே! கலைஞரின் உடன்பிறப்புகளே!**

**சேலம் செல்ல நான் தயாராகி விட்டேன்! நீங்களும் தயாராகி விட்டீர்களா?**

**சேலத்தில் எனது கண்கள், உங்களது முகங்களைத்தான் தேடும்! சேலத்தில் சந்திப்போம்!**





கலைஞர் 100 1924 - 2023
நாள் : 20.01.2024
இடம் : மத்திய பணிமனை
மாநகர் போக்குவரத்துக் கழகம்,
சென்னை.
முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு விழாவை முன்னிட்டு...
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின்
1666 பேருந்துகளில்
முதல் கட்டமாக 100 பேருந்துகள் துவக்க விழாவிற்கு வருகைதரும்...
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே
வருக! வருக!!
அன்புடன்... சா.சி.சிவசங்கர்
மாவட்ட கழக செயலாளர் - அரியலூர் மாவட்டம்
போக்குவரத்துத் துறை அமைச்சர் - தமிழ்நாடு அரசு



கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அழைக்கிறார் வாரீர்! வாரீர்!!
மாண்புமிகு இராணிப்பேட்டை ஆர்.காந்தி
கைத்தறி (ம) துணி நூல்துறை அமைச்சர்
இராணிப்பேட்டை மாவட்ட கழகச்செயலாளர்
டி.ஜெ.கோவிந்தராஜன் MLA.,
திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகச்செயலாளர்
கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி
மாநில இளைஞர் அணி நிர்வாகிகள்
எஸ்.ஜோயல் | பிரபுகஜேந்திரன்
ப.அப்துல்மாலிக் | கு.பி.ராஜா (எ) பிரதீப்ராஜா
நா.இளையராஜா | கே.இ.பிரகாஷ்
ந.ரகுபதி (எ) இன்பா | பி.எஸ்.சீனிவாசன்
சி.ஆனந்தகுமார்
மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள்
ஜெ.மோகன்பாபு | எம்.முரளிதரன் | டி.சங்கர்
செ.யுவராஜ் | இரா.கதிரவன்
மாங்கனி மாநகர் சேலத்தில்
ஜனவரி 21
இளைஞரணி மாநாடு
SS Digital
96 299 326 49
பேரன்புடன்
கே.வி.லோகேஷ்
மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
திருவள்ளூர் கிழக்கு மாவட்ட
தி.மு.க இளைஞர் அணி




கலைஞர் 100
1924 - 2023
மாங்கனி மாநகர் சேலத்தில் ஜனவரி 21
தி.மு.க இளைஞர் அணி
2வது மாநில மாநாடு
வரலாற்று இயக்கத்தின்
இளைஞர்களின்செயலாளர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்கள் அழைக்கிறார் வாரீர்! வாரீர்!!
ஆவடி சா.மு.நாசர் MLA.,
மு.அமைச்சர் – திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச்செயலாளர்
ஆ.கிருஷ்ணசாமி B.A., B.L., (Ex MP) MLA.,
மாநில ஆதிதிராவிடர்நலக்குழு செயலாளர் – பூவை சட்டமன்ற உறுப்பினர்
நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ் | பிரபுகஜேந்திரன் | ப.அப்துல்மாலிக்
தலைமை செயற்குழு உறுப்பினர் மாநில இ.அ.து.செயலாளர் மாநில இ.அ.து.செயலாளர்
சி.ஜெரால்டு | டி.தேசிங்கு
மாநில மா.அ.இ.செயலாளர் பூவை மே.ஒ.செயலாளர்
மாநில இளைஞர் அணி நிர்வாகிகள்
எஸ்.ஜோயல் | கு.பி.ராஜா (எ) பிரதீப்ராஜா
நா.இளையராஜா | கே.இ.பிரகாஷ்
ந.ரகுபதி (எ) இன்பா | பி.எஸ்.சீனிவாசன்
சி.ஆனந்தகுமார்
மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள்
ஆர்.செந்தாமரை ஜி.சி.சி.கருணாநிதி
வி.ஜெ.உமாமகேஸ்வரன்
அக்னி மா.செ.ராஜேஷ் தெ.பிரியாகுமார்
பேரன்புடன்
கே.சுரேஷ்குமார் B.Sc., B.L.,
மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
திருவள்ளூர் மத்திய மாவட்ட
தி.மு.க இளைஞர் அணி


கலைஞர்
100
1924 - 2023
கலைஞரின்
தலைமை பண்பு
21.01.2024
தி.மு.க
இளைஞர் அணி
2வது மாநில மாநாடு
இளைய
தலைவர்
அழைக்கிறார்
வாரீர்! வாரீர்!
மாண்புமிகு.
கே.என்.நேரு
கழக முதன்மை செயலாளர்
நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
காடுவெட்டி
ந.தியாகராஜன் MA., MLA.,
திருச்சி வடக்கு மாவட்ட செயலாளர்,
முசிறி சட்டமன்ற தொகுதி
மண்ணச்சநல்லூர் சீ.கதிரவன் BE., MLA.,
மண்ணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதி
திருச்சி வடக்கு மாவட்ட தி.மு.க



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், சிலட்டூர் ஊராட்சி, கடையாத்துபட்டி கிராமம், ஸ்ரீ அரியநாயகி அம்மன் கோவில் அருகில், ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து, ரூ.9.60 இலட்சம் மதிப்பீட்டில், புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணியினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2வது மாநாட்டில்

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



*புதுக்கோட்டை, ஜன. 20 -*

*வரலாற்றுச் சிறப்புமிக்க இளைஞர் அணி 2வது மாநில மாநாடு சேலத்தில் நாளை 21.01.2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது. இம் மாநாட்டில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர் என்று மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இது குறித்து மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*கழக மாநில இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நாளை 21ஆம் தேதி சேலத்தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநாடு நடைபெற உள்ளது.*

*இந்த மாநாடு தமிழகத்தில் இதுவரை நடைபெற்ற அனைத்து மாநாட்டினை மிஞ்சும் வகையில் நடைபெற உள்ளது. இந்த மாநாடு, நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலின் வெற்றிக்கு அடித்தளமாக அமையும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை. வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும் வகையில் சிறப்பான முறையில் திருப்பு முனை மாநாடாக இது அமையும்.*

*இந்த மாநாடு குறித்து கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அன்பு அழைப்பு விடுத்த வேண்டுகோளில்,*

*"நம் மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தி கன்னியாகுமரியில் தொடங்கி வள்ளுவர் பெரியார் அண்ணா கலைஞர் மண்டலம் என தமிழ்நாடு முழுவதும். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி வாரியாக இளைஞர் அணியினர் 234 தொகுதிகளிலும் கருப்புசிவப்பு உடையணிந்த இளைஞரணித் தோழர்களின் இருசக்கர வாகன அணிவகுப்பு நடந்தது. இதற்கிடையில், நம் கழகம் சார்பாக நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க வலியுறுத்தி 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற்று அதனை சேலம் மாநாட்டில் நம் கழகத் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று திட்டமிட்டோம். ஆனால், தேனீயைக் காட்டிலும் சுறுசுறுப்பான நமது தோழர்களின் அயராத உழைப்பால் 80 லட்சம் கையெழுத்துகளையும் கடந்து, மேலும் தொடர்ந்து கையெழுத்துகள் குவிந்த வண்ணம் உள்ளன. இதுதான், போர்க்களத்துக்கு தமது வீரர்களை ஒரு தளபதி தயார்ப்படுத்தும் முறை. அதனை நமது தலைவர் அவர்கள், கச்சிதமாக செய்கிறார்கள்.*

*இதே தயாரிப்போடு தான் சேலம் இளைஞர் அணி மாநில மாநாடு கழகத்தின் கொள்கைத் திருவிழாவாக நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமன்றி, இந்திய ஒன்றிய அரசியலின் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கப் போகிற இந்த மாநாட்டுக்கு இன்னும் ஒரு நாள் மட்டுமே உள்ளன.*

*இளைஞர் அணித் தோழர்களே! வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாட்டுக்குப் புறப்படத் தயாராவீர். நமது உயிருடன் கலந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் 1981ஆம் ஆண்டு இதே சேலம் ஆத்தூரில் தந்தை பெரியார் அவர்களின் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய பேருரையில்,*

*"ஓர் இயக்கத்தை வளர்த்தவர்கள், அந்த இயக்கத்தோடு சேர்ந்து வளர்ந்திருப்பவர்கள் அந்த இயக்கத்திற்குப் புதிய இரத்தம் வர வேண்டும் என்று விரும்புகிறவர்கள் அப்படி வருகின்ற புதிய இரத்தங்களை அரவணைத்து இளைய தலைமுறையினருடைய உள்ளங்களிலே இயக்கத்தினுடைய இலட்சியங்களைப் பதியவைக்கின்ற பணியிலே ஈடுபடுவதும்,*

*வருகின்ற இளைய தலைமுறையும் பழைய தலைமுறை பட்ட பாட்டினால் அல்லவா இந்தப் பலன் நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது என்று பழைய தலைமுறைக்கு மதிப்பளித்துக் காரியமாற்றவும் , இந்த இயக்கம் நடைபோட வேண்டும் என்பது தான் என்னுடைய அந்த ஆவலாகும்" என்று சொன்னார். கலைஞர் அவர்களின் ஆவலை நிறைவேற்றும் வகையில் அதே சேலம் ஆத்தூரில் நமது மாநாடு அமைய வேண்டும். புதிய ரத்தம் பாய்ச்சவும், இயக்கத்தின் இலட்சியங்களை அவர்கள் மனதில் பதிய வைக்கவும், மூத்தத் தலைவர்களின் வழிகாட்டுதல்படி நடக்கவும் உறுதியேற்கத் தான் நம் இளைஞரணியின் மாநில மாநாடு! உங்கள் ஒவ்வொருவரையும் மாநாட்டுப் பந்தலில் என் கண்கள் தேடும்.*

*தமிழ்நாட்டை மட்டுமல்ல ஒட்டு மொத்த இந்தியாவையும் காக்க" என்று குறிப்பிட்டுள்ளார்.*

*எனவே கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று, சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் நாளை (21.1.2024) காலை 8 மணிக்கு நமது புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற முன்னாள்,*

*இந்நாள் உறுப்பினர்கள். தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞரணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய கவுன்சிலர்கள், கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்டச் செயலாளர் , அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கையில் கூறியுள்ளார்.*

### தி.மு.க. மாணவர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், இன்று (20.1.2024 சனிக்கிழமை), காலை 11.00 மணியளவில், சேலம் மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் மாளிகை" 'வீரபாண்டியார் அரங்கத்தில்' எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ் காந்தி, மாணவர் அணி இணைச்செயலாளர்கள் சி. ஜெரால்டு, எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1) 27.01.2024 அன்று சென்னையில் நடைபெற உள்ள மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்; 2) 01.02.2024 அன்று, சென்னையில் யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா (United Students of India) கூட்டமைப்பின் சார்பில் நடைபெற உள்ள மாபெரும் மாணவர் பேரணி; 3) கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு மாநில அளவிலான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி; 4) மாணவர் அணி ஆக்கப் பணிகள் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18 - நாள்: 18.01.2024

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர் - தி.மு.க. மாணவர் அணி



சேலம் மத்திய மாவட்டம் ஓமலூரில் ஒன்றிய தி.மு.க. செயலாளர். ஓ.எம்.ரமேஷ் முன்னிலையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன். எம்.எல்.ஏ. உதயநிதி நற்பணி மன்ற பொதுச் செயலாளர் பி.கே.பாபு ஆகியோர். கலந்து கொண்டு பொது மக்களுக்கு கரும்பு, பொங்கல் வழங்கினார்கள். உடன் மாவட்ட கவுன்சிலர்கள், சண்முகம், அழகிரி, சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் பி.குப்புசாமி, பேரூர் செயலரளர் ரவிச்சந்திரன், செல்வராணி உட்பட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# 'மாநில உரிமை முழக்கம்' - இது நிகழ்காலத் தேவை!

**மாநிலங்களின் வளர்ச்சியிலும் வலிமையிலும்தான் இந்திய ஒன்றியத்தின் உறுதித்தன்மை நீடித்து நிலைத்திருக்கும் என்பதே கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படை. திராவிட முன்னேற்றக் கழகம் இதனை அரை நூற்றாண்டு காலமாகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றி இந்திய ஒன்றியத்திற்கான கூட்டாட்சிக் கொள்கையை அனைத்து மாநில அரசுகளையும் உணரச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவருடைய தொலைநோக்குப் பார்வையும் முழக்கமும், இன்று பல மாநிலங்களிலும் எதிரொலிப்பதைக் காண முடிகிறது.**

பிரதமர் நரேந்திர மோடி குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர். அப்போது மாநில உரிமைகள் குறித்து அதிகம் பேசியவர். ஒன்றியத்தில் ஆட்சியில் இருந்த டாக்டர் மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசிடம் தனது மாநிலத்திற்கு அதிக நிதியைக் கோரியவர். வரி வசூல் உரிமையை மாநிலங்களிடமிருந்து பறிக்கும் ஜி.எஸ்.டி. முறையை அன்றைக்கு எதிர்த்தவர்தான் மோடி. மருத்துவப் படிப்பிற்கான நீட் தேர்வையும் மோடியின் குஜராத் மாநில அரசு எதிர்த்தது. 2001ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை குஜராத் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி, பின்னர் இந்தியாவின் பிரதமர் ஆனார்.



**-கோவி.லெனின்**
கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

மாநிலத்தின் முதலமைச்சராக அதன் நிதித் தேவையை அறிந்தவர், நாட்டின் பிரதமராகும்போது மாநிலங்களின் உரிமைகள் மதிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதற்கு நேர்மாறாக செயல்பட்டது மோடியின் அரசு. இரவு நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கூட்டி ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. கருப்புப் பண ஒழிப்பு என்ற பெயரில் நடுஇரவில் பணமதிப்பிழப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நடுச்சாலையில் மக்களை அல்லாட வைத்த மோடியின் ஆட்சி, கடைசி வரை கருப்புப் பணத்தை ஒழிக்கவில்லை. கலர் கலராக புதுப்புது ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதும், பின்னர் அதனை மோடி அரசே ரத்து செய்வதுமாக விளையாட்டுக் காட்டியதைத் தவிர உருப்படியாக எதுவும் நடக்கவில்லை.

**அகண்ட பாரதம் எனக் கனவு காணும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் இருப்பதையோ, மாநில அரசுகள் வலிமைபெற்று இருப்பதையோ தனது கொள்கைப்பூர்வமாக விரும்புவதில்லை. மாநிலங்களை 'முனிசிபாலிட்டி– பஞ்சாயத்து' அளவுக்கான அதிகாரத்தில் வைத்துக்கொண்டு, ஒன்றிய அரசிடம் எல்லா அதிகாரங்களையும் குவித்திட வேண்டும் என்பதுதான் அதன் நோக்கம். தன் சித்தாந்தங்களை பா.ஜ.க. அரசு மூலம் நிறைவேற்றத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் விருப்பத்திற்கேற்ப, மாநிலங்களையும் அதன் உரிமைகளையும் சிதைக்கிறது பா.ஜ.க. அரசு.**

இந்திய வரைபடத்தின் தலைப்பகுதியில் உள்ள ஜம்மு–காஷ்மீர் தனது மாநில அந்தஸ்தை பா.ஜ.க. ஆட்சியில் இழந்து, அதிகாரங்கள் குறைக்கப்பட்ட இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிளவுபடுத்தப் பட்டிருக்கிறது. அங்கே தேர்தலும் நடத்தப்படவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமும் இல்லை. தேர்தல் நடத்தப்பட்டு, மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் யூனியன் பிரதேசம் என்ற முறையில் ஆளுநர், துணை நிலை ஆளுநர் இவர்களிடமே அதிகாரம் குவிந்திருக்கும். நம் அருகில் உள்ள புதுச்சேரி அரசில் தொடங்கி, தலைநகரத்தில் உள்ள டெல்லி அரசு வரை படும் பாட்டை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இத்தனையும் நடப்பது 13 ஆண்டுகாலம் குஜராத்தின் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி இந்திய ஒன்றியத்தின் பிரதமராக இருந்து வரும் இந்த 10 ஆண்டு காலத்தில்தான்.

மாநிலங்களைக் காலடியில் போட்டு நசுக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் மறைமுகத் திட்டத்தை நேரடியாகப் போட்டு உடைத்திருக்கிறார் நிதி ஆயோக் அமைப்பின் தலைமைச் செயல் அதிகாரி பி.வி.ஆர்.சுப்பிரமணியம். நரேந்திர மோடி பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு, 2014ல் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய அரசின் முதல் நிதிநிலை அறிக்கையின்போதே, மாநில அரசுகளுக்கான நிதிப் பகிர்வைக் குறைப்பது பற்றி நிதிக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளது பா.ஜ.க. அரசு.

சமூகம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான மையத்தின் சார்பில் இந்தியாவின் நிதி அறிக்கை என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் வெளிப்படையாக சில உண்மைகளைப் பேசியிருக்கிறார் சுப்பிரமணியம். 2013ஆம் ஆண்டு 14வது நிதிக்குழு அமைக்கப்பட்டபோது குஜராத் மாநில முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி, ஒன்றிய அரசின் வரிகளிலிருந்து மாநிலங்களுக்கு 50% அளவுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கேட்டது அப்போது தலைப்புச் செய்தியாக வெளியானது. 2014ஆம் ஆண்டு டிசம்பரில் 14வது நிதிக் குழு தனது அறிக்கையை முன்வைக்கிறது. அதுவரை ஒன்றிய அரசின் வரி வருவாயிலிருந்து மாநிலங்களுக்கு 32% மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலையில், இனி 42% வழங்கலாம் என நிதிக்குழு தனது அறிக்கையில் தெரிவித்திருந்த நிலையில், பிரதமராகிவிட்ட நரேந்திர மோடியும் அவரது நிதி அமைச்சகமும், மாநிலங்களுக்கு 33% வரியைப் பகிர்ந்தளித்தால் போதும் என வலியுறுத்தியதை சுப்பிரமணியம் வெளிப்படுத்தியுள்ளார்.

**முதலமைச்சராக 50% கேட்டவர், பிரதமரானதும் 33% மட்டும்தான் தரமுடியும் என்ற நிலைப்பாட்டை எடுத்ததையும், அதற்கான நிதிக்குழுத் தலைவராக இருந்த ஒய்.வி.ரெட்டியிடம், நடைமுறைகளுக்கும் நெறிமுறைகளுக்கும் மாறாக கொல்லைப்புறம் வழியாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதையும் , அதில், அப்போது பிரதமர் அலுவலகத்தின் இணைச் செயலாளராக இருந்த, தான் பங்கேற்று இரண்டு மணிநேரம் பேசியதையும் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். நிதிக் குழுவின் பரிந்துரைகளை நிராகரிக்கவும், புதிய நிதிக்கழு அமைக்கவுமே ஒன்றிய அரசுக்கான அதிகாரத்தை அரசியல் சட்டம் வழங்கியுள்ள நிலையில், 42% அளவுக்கு வரிப் பகிர்வை மாநிலங்களுக்கு வழங்கலாம் என்ற நிதிக் குழுவின் அறிக்கையை ஏற்க மறுத்தாலோ, புதிய நிதிக்குழு அமைத்தாலோ, முதலமைச்சராக இருந்தபோது மாநிலங்களுக்கு 50% வரை வரிப் பகிர்வு செய்யப்பட வேண்டும் என்ற மோடியின் இரட்டை வேடம் அம்பலமாகிவிடும் என்பதாலேயே, அறிக்கையில் திருத்தம் செய்யச் சொல்லி, கொல்லைப்புற வழியைக் கடைப்பிடித்துப் பார்த்துள்ளது பா.ஜ.க. அரசு. திருத்தம் செய்ய அரசியல் சட்டம் அனுமதிக்காது என்பதை நிதிக்குழுத் தலைவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

பா.ஜ.க. அரசு இதையெல்லாம் மறைத்து, மாநிலங்களுக்கான வரிப் பகிர்வை உயர்த்தி வழங்குவதில் நிதிக் குழு உறுப்பினர்களிடையே மாறுபட்ட கருத்துகள் இருந்ததாகவும், தங்களுடைய அரசுதான் மாநிலங்களின் நலன் கருதி வரிப்பகிர்வை உயர்த்தியதாகவும் நாடாளுமன்றத்தில் மோடி பேசியதையும் அம்பலப்படுத்தியிருக்கிறார் சுப்பிரமணியன். அதுமட்டுமின்றி, "நாம் கொடுக்கும் வரிப் பகிர்வுத் தொகையை வைத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு சில மாநிலங்களிடம் பெரிய கருவூலம் இல்லை" என்று பிரதமர் மோடி 'புளிப்புக் காமெடி' செய்ய, அதற்கு பா.ஜ.க. உறுப்பினர்கள் மேஜையைத் தட்டி சிரித்ததையும் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

மாநில அரசுகளின் அதிகார வரம்பிற்குட்பட்ட, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கான (கர்ப்பிணிப் பெண்கள், சிசுக்கள், பாலூட்டும் தாய்மார்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு) 36ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீட்டை மோடி அரசு தனது முதல் பட்ஜெட்டில் பாதிக்குப் பாதியாக 18ஆயிரம் கோடி ரூபாய் எனக் குறைத்ததையும், அதுபோல பள்ளிக்கல்விக்கான நிதி ஒதுக்கீடு முந்தைய (2013-14)ஆண்டைவிட 18.4% குறைக்கப்பட்டதையும் அம்பலப்படுத்தும் சுப்பிரமணியம், மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசின் முதல் நிதிநிலை அறிக்கையின் அம்சங்களை நிதிக்குழு ஏற்க மறுத்ததையும், நிதிநிலை அறிக்கை திருத்தி எழுதப்பட்டதையும் குறிப்பிடுகிறார்.

அதானி நிறுவனத்தின் பங்கு மதிப்பீட்டு மோசடியை அம்பலப்படுத்திய ஹின்டன்பர்க் அறிக்கையைப் போல, இந்திய ஒன்றிய அரசின் நிதி தொடர்பான கணக்கு வழக்குகள் வெளிப்படைத் தன்மையுடன் முன்வைக்கப்பட்டால் முழுமையாக அம்பலமாகிவிடும் என்று அந்தக் கருத்தரங்கில் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். "ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் என்ற பெயரில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சில உண்மைகளை ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து மறைக்கிறார். மாநிலங்களுக்குத் தர வேண்டிய நிதியை வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காக குறைவாகத் தருகிறார்" என்ற குற்றச்சாட்டையும் அவர் வைத்துள்ளார்.

Tip of the Ice Berg **என்பது போல, மாநில உரிமைகள் பறிப்பு என்கிற பெரும் பனிப்பாறையின் ஒரு துளிதான் நிதி ஆயோக் தலைமைச் செயல் அதிகாரியின் வெளிப்பாடு. மொழி ஆதிக்கம் தொடங்கி, ஆளுநரைக் கொண்டு இணை அரசாங்கம் நடத்த முயற்சிப்பது வரை அரசியல் சாசனத்திற்கு எதிரான செயல்பாடுகள் பா.ஜ.க. ஆட்சியில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பா.ஜ.க. ஆட்சி செய்யாத– ஆட்சி செய்ய வாய்ப்பே இல்லாத மாநிலங்கள் திட்டமிட்டு பழி வாங்கப்படுகின்றன. இதை முறியடிப்பதற்கான குரல் , அண்ணா–கலைஞர் வழியில் மீண்டும் தெற்கிலிருந்து ஒலிக்க வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டிருக்கிறது.**

கழகத் தலைவர்- முதலமைச்சர் அவர்களால் வளர்க்கப்பட்ட இளைஞரணியின் இன்றைய செயலாளர்- அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் ஜனவரி 21ஆம் நாள் சேலத்தில் நடைபெறும் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு, மாநில உரிமை முழக்கத்தை முன் வைக்கிறது. அது இந்தியா முழுமைக்கும் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் ஒலித்தாக வேண்டிய நிகழ் காலத் தேவை உள்ளது.

மாநில உரிமைக் குரல் ஓங்கியும் ஒருங்கிணைந்தும் ஒலிக்கும்போது, ஜனநாயகத்திற்கு எதிரான அதிகார மையங்கள் தகர்ந்து வீழும்.

## ஓசூர் மருத்துவமனையை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

# மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தும் பணிக்கு அடிக்கல்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் நாட்டினார்!

சென்னை,ஜன.20-

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.1.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ஓசூர் மருத்துவமனையை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிக்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.**

**மேலும், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் சிகிச்சை உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 59 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் ”மக்களைத் தேடி மருத்துவம் சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் ”இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும்48, சுகாதார நடைபாதை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறையின் 2022–23ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், தமிழ்நாட்டில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் இல்லாத மாவட்டங்களில் மக்கள் பயன்பெறும் வகையில் உயர்தர மருத்துவ சேவைகளை வழங்கிட புதிய மாவட்ட தலைமை மருத்துவமனை அமைத்தல் மற்றும் மருத்துவமனைகளை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் ஜெயங்கொண்டான், தாம்பரம், பழனி, திருக்கோவிலூர், கரூர், ஓசூர், மயிலாடுதுறை, வேதாரண்யம், ராசிபுரம், அறந்தாங்கி, பரமக்குடி, கூடலூர், திருத்தணி, வள்ளியூர், திருப்பத்தூர், காங்கேயம், குடியாத்தம், திண்டிவனம் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய 19 அரசு மருத்துவமனைகள் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

### வலுவான சுகாதார உட்கட்டமைப்பு!

அந்த அறிவிப்பின்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள அரசு மருத்துவமனையை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிக்கு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

புதிய தொழிற்சாலைகள் மற்றும் விரிவடைந்து வரும் தகவல் தொழில்நுட்பத் துறை காரணமாக ஓசூர் மாநகராட்சி குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்து வருகிறது. ஆகையால் பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப ஒரு வலுவான சுகாதார உட்கட்டமைப்பை ஏற்படுத்துவது அவசியமான ஒன்றாகும். எனவே, ஓசூரில் உள்ள அரசு மருத்துவமனையை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி, விரிவான சிறப்பு மருத்துவ சேவைகளை வழங்கும் வகையில்,

22,395 சதுர மீட்டர் பரப்பளவில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் 419 படுக்கைகள் கொண்ட மாவட்ட தலைமை மருத்துவமனை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது.

இம்மருத்துவமனையில், அதிநவீன வசதிகளுடன் கூடிய புறநோயாளிகள் பிரிவு, தீவிர சிகிச்சை பிரிவுகள் மற்றும் உயர் சார்பு பிரிவுகள், அறுவை சிகிச்சை அரங்கு வளாகங்கள், அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும் நோயாளிகளுக்கான பிரத்யேக அறைகள், ஆண் மற்றும் பெண் உள்நோயாளி பிரிவுகள், வலி மற்றும் நோய்த்தடுப்பு சிகிச்சை பிரிவுகள், முதியோர்களுக்கான சிறப்பு பிரிவுகள், கட்டண பிரிவுகள் ஆகிய பிரிவுகளும், அவசரகால மற்றும் விபத்து மேலாண்மை சிகிச்சை பிரிவு (TAEI), இரத்த சுத்திகரிப்பு சேவைகள், ART மையம், மத்திய மருந்துக் கடைகள், காசநோய் சிகிச்சைக்கான சேவைகள், மருத்துவக் கழிவு மேலாண்மை மற்றும் நோயாளிகள் பதிவு அறைகள் போன்ற கூடுதல் வசதிகளும் வழங்கப்படும்.

‘108’ அவசரகால ஊர்தி சேவையானது 2008 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

‘108’ அவசர கால சேவையானது அரசு தனியார் பங்களிப்பு திட்டமாக செயல்படுத்தப்பட்டு, 24x7 மணி நேரமும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பொதுமக்கள் அவசர கால மருத்துவ தேவைக்கு தொலைபேசி எண்ணான ”108”–ஐ தொடர்பு கொண்டு பயன்பெறுகின்றனர்.

அவசரகால நெருக்கடியின் போது தேவையான மருத்துவ உதவியை இலகுவாகவும், உடனடியாகவும் பொதுமக்கள் அனைவரும் பெற்று பயன்பெறும் வகையில், தற்போது 1,353 எண்ணிக்கையிலான ‘108’ அவசர கால ஊர்திகள் செயல்பாட்டில் உள்ளன. ‘108’ சேவை மூலம் இதுவரை 1.61 கோடி பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

2023–24ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில், 108 அவசரகால ஊர்திகளின் சேவையை வலுப்படுத்த 62 புதிய அவசரகால ஊர்திகள், 13 தாய் சேய் நல ஊர்திகள் மற்றும் 98 நவீன வென்டிலேட்டர் கருவிகள் ஆகியவை கொள்முதல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ”108 அவசரகால ஊர்திகளின் சேவைகளை மேம்படுத்த, அடிப்படை வசதி கொண்ட 55 புதிய அவசர கால ஊர்திகள், பழங்குடியினர்கள் பயன்பாட்டிற்காக மலைபகுதிகளில் செல்லத்தக்க வகையில் 7 புதிய நான்கு சக்கர அவசர கால ஊர்திகள், தாய் சேய் நல ஊர்தி (JSSK) திட்டத்தின் கீழ் 13 புதிய ஊர்திகள், என மொத்தம் 14 கோடியே 73 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 75 புதிய ஊர்திகளை பொது மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கும் விதமாக, முதலமைச்சர் அவர்கள் ஊர்தி ஓட்டுநர்களிடம் அவ்வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்.

மேலும், மேம்படுத்தப்பட்ட அவசரகால ஊர்திகளில் பொருத்திடும் வகையில் 6 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 98 நவீன செயற்கை சுவாச கருவிகளை (Transport Ventilator) பொதுமக்கள் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

### பாராட்டுச் சான்றிதழ்கள்!

மிக்ஜாம் புயல் மற்றும் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் பெய்த அதி கனமழையின் போது சிறப்பாக பணியாற்றிய ”108 அவசரகால ஊர்தி பணியாளர்கள் எஸ். மோகன், எஸ். ராஜா, என். அரவிந்த்குமார், கே. சந்தனமாரியப்பன் ஆகியோருக்கு முதலமைச்சர் அவர்கள் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையில் சிகிச்சை உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 59 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் கீழ் இயங்கும் யோகா மற்றும் இயற்கை மருத்துவ நிலையங்களில் காலியாக உள்ள 59 சிகிச்சை உதவியாளர் பணியிடங்களுக்கு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தால் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றின் நிலையை கண்டறிய அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பரிசோதனை மையங்கள், பால்வினைத் தொற்று சிகிச்சை மையங்கள் மற்றும் கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் வாயிலாக கட்டணமில்லா மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. இதன் பயனாக தமிழ்நாட்டில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தாக்கம் குறைந்துள்ளது.

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தால் 2023 டிசம்பர் மாதம் புதுதில்லியில் நடைபெற்ற அனைத்து திட்ட இயக்குநர்கள் கூட்டத்தில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் அனைத்து திட்ட பிரிவுகளிலும் சிறப்பாக செயல்பட்டதற்காக, சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக (Best Performing State) தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்து, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு 2022–23ஆம் ஆண்டிற்கான பாராட்டு சான்றிதமும், கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மைதிலி கே. ராஜேந்திரன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்ட இயக்குநர் / உறுப்பினர் செயலர் டி.என். ஹரிஹரன், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் எம். கோவிந்த ராவ், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.ஏ. சண்முககனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ. செல்லக்குமார், சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ம. சரயு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாடு சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வரும் 21-ஆம் தேதி ஞாயிறு அன்று நடைபெற உள்ள நிலையில், மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்டம், சென்னையிலிருந்து 18.01.2024 (வியாழக்கிழமை) காலை தொடங்கியது. சென்னை அண்ணா சாலை சிம்சன் சந்திப்பில் உள்ள பெரியார் சிலையிலிருந்து மாநாட்டுச் சுடர் ஓட்டத்தை, மாண்புமிகு அமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் காலை 7.00 மணி அளவில் தொடங்கி வைத்தார்.

மாநாட்டுச் சுடர் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி வழியாக 316 கிலோ மீட்டர் தூரம் பயணித்து சேலம் மாநாட்டுத் திடலைச் சென்றடைகிறது. இந்த மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்டத்தில் அந்தந்த மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | இடம் / தொகுதி / மாவட்டம் | பங்கேற்போர் |
|---|---|---|---|
| 19.01.2024 | 4:10 AM | கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி தெற்கு. | **வசந்தம் க.கார்த்திகேயன்** எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர், **வி.பி.தாகப்பிள்ளை** மாவட்ட அமைப்பாளர், கள்ளக்குறிச்சி தெற்கு. |
| 20.01.2024 | 5:20 AM | சின்ன சேலம், சின்ன சேலம், கள்ளக்குறிச்சி தெற்கு. | |
| 20.01.2024 | 9:00 AM | தலைவாசல், கெங்கவள்ளி, சேலம் கிழக்கு. | **எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆர்.ராஜேந்திரன் டி.எம்.செல்வகணபதி** மாவட்டச் செயலாளர்கள், **வீரபாண்டி டாக்டர் ஆ.பிரபு மு.மணிகண்டன் சௌ.அருண் பிரசன்னா கேபிள் சரவணன்** மாவட்ட–மாநகர அமைப்பாளர்கள், சேலம். |
| 20.01.2024 | 11:00 AM | ஆத்தூர், ஆத்தூர், சேலம் கிழக்கு. | |
| 20.01.2024 | 1:30 PM | பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர், சேலம் கிழக்கு. | |

**தி.மு.க. இளைஞர் அணி**
**அன்பகம், சென்னை – 18**
**நாள் : 17.01.2024**


## ராமர் கோவில் பெயரால் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் சுருட்டல்!

# நாடாளுமன்றத் தேர்தலில் மோடியின் சுயநல அரசியலைத் தோலுரிப்போம்!

## ‘தீக்கதிர்’ டிஜிட்டல் பதிப்பிற்கு மார்க்சிஸ்ட் கம்யூ. ஆர்.பத்ரி சிறப்புப் பேட்டி!



**ஆர்.பத்ரி**
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலக் குழு உறுப்பினர்

சென்னை, ஜன.19-

சமூக வலைதளமான ‘தீக்கதிர்’ பதிப்பிற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆர். பத்ரி அளித்துள்ள சிறப்பு பேட்டி வருமாறு:-

ஜனவரி 22-ல் அயோத்தியில் ‘ராமர் ஆலயம்’ பிரமாண்டமாக கட்டப்பட்டு, பிரதமர் மோடி அவர்கள் திறந்து வைக்கப் போகிறார்.

இது குறித்து நாடு முழுவதும் இரண்டு விவாதம் நடைபெறுகின்றது. இது அரசியல் நிகழ்ச்சியா? அல்லது ஆன்மிக நிகழ்ச்சியா ? என்று பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்.ஸை சேர்ந்தவர்கள் மற்றும் பிரதமர் மோடி ஆகியோர் இது முழுக்க முழுக்க ஆன்மிக நிகழ்ச்சி என்று சொல்கிறார்கள்.

ஆனால், இதனை எதிர்க்கக்கூடிய பல பேர், “பா.ஜ.க. தன்னுடைய அரசியலுக்காக இந்த ராமர் கோவில் திறப்பை நடத்துகிறார்கள், பயன்படுத்துகிறார்கள்” என்று ஒரு கருத்தை வைத்து கொண்டே இருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக ஏராளமான விவாதங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. நான்கு சங்கராச்சாரியார்கள், இவர்கள்தான் இந்து மதத்தினுடைய அடையாளம் என்று சொல்லக்கூடியவர்கள் இவர்கள் நான்கு பேரும், இந்த ஆலயத் திறப்பு விழாவிற்கு வரப்போவதில்லை என்று திறப்பு விழாவை புறக்கணித்து விட்டார்கள்.

அவர்கள் கூறும் காரணம் என்ன?

இது ஒரு அரசியல் நோக்கம்; இதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்கிறார்கள்.

ஆனால் ஆர்.எஸ்.எஸ்.ஸோ, பா.ஜ.க.வோ, பிரதமர் மோடியோ “இல்லை, இல்லை இது நாடு முழுவதும் கொண்டாடப்பட வேண்டிய இரண்டாவது சுதந்திரத் திருநாள்” என்று பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த விவாதங்களை எல்லாம் விட்டு விடுவோம், இது அரசியலா, ஆன்மிகமா என்ற இந்த விவாதங்களைத் தள்ளி வைத்து விடுவோம்.

“கேரவன்” இதழானது மிகவும் சுவாரசியமான, மறைக்கப்பட்ட சில உண்மைகளை வெளியிட்டுள்ளது. அது சம்பந்தமாக நாம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது.

உண்மையிலேயே ஆர்.எஸ்.எஸ்.ஸும், பா.ஜ.க.வும் சொல்கின்ற மாதிரி, இப்போது அமைக்கப்பட்டு இருக்கின்ற அறக்கட்டளை (Trust) ராம ஜென்ம பூமி தீர்த்த சேத்ரா. அதுதான் புதியதாக அமைக்கப்பட்டுள்ள டிரஸ்ட். இந்த அமைப்பு ஆன்மிக அமைப்பா? என்றால் இல்லை!

‘கேரவன்’ இதழ் என்ன சொல்கிறது? அந்த டிரஸ்ட்டின் ஜெனரல் செக்ரட்டரி யார் என்றால் விஸ்வ இந்து பரிஷத் (வி.எச்.பி.) அமைப்பைச் சேர்ந்த சம்பத் ராய் பன்ஜால், அவர்தான் இதனுடைய ஜெனரல் செக்ரட்டரி.

இதனுடைய டிரஸ்டி யார்? ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த கோவிந்த் கிரி.

அப்படி என்றால் வி.எச்.பி.யும், ஆர்.எஸ்.எஸ்ஸும் இணைந்து உருவாக்கப்பட்டு இருக்கின்ற ஒரு டிரஸ்ட், எப்படி ஆன்மிக அமைப்பாக இருக்க முடியும்?

இதனை விட மிகவும் முக்கியமானது; இந்த ஆலயக் கட்டுமானங்களை முழுக்க முழுக்க மேற்பார்வையிடக்கூடிய பொறுப்பு யாரிடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றால், பிரதமருடைய பிரின்ஸ்பல் செக்ரட்டரி நிர்வேந்திர மிஸ்ரா, அவரிடம் தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்தான் முழுக்க முழுக்க இதனைக் கண்காணிக்கிறார். இதன் வேலைகளை வழி நடத்துகிறார்.

அப்படி என்றால் மோடியினுடைய விருப்பத்திற்காக அமைக்கப்பட்டு இருக்கின்ற டிரஸ்ட் தான் இந்தக் கோவிலைக் கட்டுகிறது. அப்போது அரசியலுக்கும், ஆன்மிகத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொல்லக்கூடிய விவாதம் இந்த இடத்தில் அடிபட்டுப் போகின்றது.

இரண்டாவது முக்கியமான விஷயம், ‘கேரவன்’ இதழ் வெளிப்படுத்தி இருக்கின்ற முக்கியமான உண்மை என்னவென்றால், இந்த டிரஸ்ட்க்கு இதுவரை எவ்வளவு பணம் சேர்ந்திருக்கிறது? 2019-இல் அமைக்கப்பட்டது இந்த டிரஸ்ட். மோடி முதன் முதலாகப் போய் ஒரு ரூபாய் நன்கொடை கொடுத்து, இந்த டிரஸ்ட்க்கான நிதி திரட்டலை ஆரம்பித்து வைத்து இருக்கிறார்.

மோடி ஒரு ரூபாய் கொடுத்த அந்த ஆண்டில் அந்த டிரஸ்ட்டுக்கு 42 கோடி ரூபாய் சேர்ந்து இருக்கிறது. மூன்றே ஆண்டுகளில் 3500 கோடி ரூபாய் அந்த டிரஸ்ட்க்கு பணம் சேர்ந்திருக்கிறது. எப்படி மூன்று ஆண்டுகளில் இந்த டிரஸ்ட்க்கு 3500 கோடி ரூபாய் பணம் கிடைக்கும்.?

‘கேரவன்’ இதழ் என்ன எழுதுகிறது? என்றால், உள்நாட்டில் இருக்கக்கூடிய பணக்காரர்கள் மட்டும் அல்ல, உலகம் முழுவதும் இருக்கக் கூடிய பணக்காரர்களிடமிருந்து இந்த அமைப்பு மிகப்பெரிய அளவிற்கு நிதியைத் திரட்டி இருக்கிறது என்று எழுதி இருக்கிறது.

இதில் மிகவும் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், 2019 முதல் 2021 வரைக்குமான இரண்டு ஆண்டுகளில், இந்த மோடியினுடைய பா.ஜ.க. 2000 என்.ஜி.ஓ.க்களையும் டிரஸ்ட்களையும் தடை செய்கிறார்கள். என்ன காரணம் சொல்லி தடை செய்கிறார்கள்?

நீங்கள் வெளிநாடுகளில் இருந்து நிறைய பணத்தை உள்ளே கொண்டு வருகிறீர்கள், எதற்கு கொண்டு வருகிறீர்கள் என்று தெரியவில்லை. உங்களுடைய நடவடிக்கைகள் முழுவதும் சந்தேகத்திற்கிடமாக இருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி, 2000-க்கும் மேற்பட்ட என்.ஜி.ஓ.க்களின் டிரஸ்ட்டுகளைத் தடை செய்கிறார்கள்.

அதே காலத்தில்தான், இந்த ராமஜென்ம பூமி தீர்த்த சேத்ரா (shri ram janma boomi teerth kshetra) என்ற இந்த டிரஸ்ட்டுக்கு 3500 கோடி ரூபாய் பணம் வந்திருக்கிறது. வந்திருக்கின்ற பணத்தில் மிகப் பெரிய அளவிற்கு வெளிநாடுகளில் இருந்தே வந்திருக்கிறது.

இன்னொரு முக்கியமான விஷயம், இவர்கள் எப்போதுமே சொல்வார்கள், “கருப்புப் பணத்தை நாங்கள்தான் மீட்டோம், வருமான வரி ஏய்ப்பை நாங்கள்தான் தடுத்தோம். ஆகவே தான் அமலாக்கத்துறையோ அல்லது வருமான வரித்துறையோ பெரிய அளவில் வேலை செய்துகொண்டே இருக்கிறது” என்று சொல்வார்கள்.

இதில் மிகவும் முக்கியமான விஷயமாக ‘கேரவன்’ இதழ் என்ன சொல்கிறது?.

இந்த 3500 கோடி ரூபாய்க்கு வருமான வரி கட்ட வேண்டும். 30 சதவிகிதம் வருமான வரி கட்ட வேண்டும். வேண்டாம் பத்து சதவிகிதம் என்று எடுத்தால் கூட குறைந்த பட்சம் 350 கோடி ரூபாய் வருமான வரி கட்ட வேண்டும்.

ஆனால், இந்த டிரஸ்ட் கட்டி இருக்கிறதா? வருமான வரித்துறையை இந்த டிரஸ்ட் மிகப்பெரிய அளவில் ஏமாற்றி இருக்கிறது. எப்படி ஏமாற்ற முடியும்? அதில்தான் இவர்களுடைய மிகப் பெரிய புத்திசாலித்தனத்தைப் பார்க்க முடியும்.

இவர்கள் 3,500 கோடி ரூபாயை எப்படித் திரட்டி இருக்கிறார்கள் என்றால். ஆலயத்தைப் புனரமைப்பது, ஏற்கனவே இருக்கின்ற கோயில் இடிந்து போய் விட்டது, அதனை நாங்கள் புனரமைப்பு செய்கிறோம், அப்படியென்று சொல்லி நிதி திரட்டி இருக்கிறார்கள். புதியதாக கோயிலைக் கட்ட நிதி திரட்டுகிறோம் என்றால் வருமானவரி கட்ட வேண்டும், ஆனால் புனரமைப்பு செய்கிறோம் என்றால் வருமானவரி கட்ட வேண்டியதில்லை.

முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்திடம் 5 இலட்சம் ரூபாய் நன்கொடை வாங்கி இருக்கிறார்கள். அதற்கு ரசீது கொடுத்து இருக்கிறார்கள். அந்த ரசீதில் புனரமைப்பு என்று இருக்கிறது. ஆலயத்தைப் புனரமைப்பது என்கின்ற பெயரால் முன்னாள் குடியரசுத் தலைவர் உட்பட உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் 3,500 கோடி ரூபாய் பணத்தைத் திரட்டி, இந்தியாவின் வருமான வரித் துறையையும் இவர்கள் மிகப்பெரிய அளவிற்கு ஏமாற்றி இருக்கிறார்கள். அந்த மோசடியும் இதில் நடந்திருக்கிறது - என்று ‘கேரவன்’ இதழ் வெளிப்படுத்தியிருக்கிறது.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில்தான், இந்த ராமர் ஆலயம் கட்டுகிறார்கள். அப்படியென்றுதான் இந்தியா முழுவதும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால், உண்மை என்னவென்றால்? பாபர் மசூதி மட்டுமல்ல; அந்த வளாகத்தில் இருக்கின்ற 12-க்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டு இருக்கின்றன.

‘பக்கிர் ராம் மந்தீர்’ என்கின்ற கோவில் அங்கே இருக்கிறது.

‘கோசலை பவன்’ என்கிற கோவில் அங்கே இருக்கிறது.

‘கைகேயி காபவன்’ என்கிற கோயில் அங்கே இருந்திருக்கிறது.

இப்படி 12 க்கும் மேற்பட்ட இந்துக் கோவில்கள் அங்கே இருக்கின்றன. ஒவ்வொரு கோவிலுக்கும் ஒரு கதை இருக்கிறது.

14 ஆண்டுகள் ராமர் வனவாசம் போனார். அவருக்கான உடைகள் எல்லாம் இங்கே இருந்துதான் தைக்கப்பட்டு அனுப்பப்பட்டன என்ற கதையின் பெயரால் பல கோவில்கள் அங்கே கட்டப்பட்டு இருக்கின்றன.

எல்லாக் கோவில்களையும் வலுக்கட்டாயமாக இடித்து இருக்கிறார்கள். இந்த ஆலய இடிப்பை எதிர்த்து ஒருவர் நீதிமன்றம் சென்றிருக்கிறார். அவர் பெயர் சந்தோஷ் பூபே. இவர் சிவசேனா கட்சியைச் சேர்ந்தவர். இவர் நீதிமன்றத்தில் மிகவும் சுவாரசியமான வாதத்தை முன் வைத்து இருக்கிறார். அவர் என்ன சொல்கிறார்?

“இவர்கள் வலுக்கட்டாயமாக எங்கள் கோவில்களை இடித்து கடவுளை வேறு இடத்தில் வைக்கலாம் என்று சொல்கிறார்கள். அப்படி என்றால் கடவுள்களை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றம் செய்ய முடியும் என்று சொன்னால், பாபர் மசூதி இருந்த இடத்தை இடித்து விட்டு, ராமருக்கு ஏன் கோயில் கட்ட வேண்டும்? அந்த ராமர் கோவிலை வேறு இடத்தில் கட்ட முடியாதா? அப்படியென்றால் இவர்கள் கட்டக்கூடிய ராமர் ஆலயத்திற்கு ஒரு வாதம், எங்களைப் போன்றோர் வணங்கும் 12-க்கும் மேற்பட்ட ஆலயங்களை இடித்து, எங்கள் கடவுள்களை இடமாற்றம் செய்யக்கூடிய ஒரு மோசமான நடவடிக்கையை இவர்கள் செய்கிறார்கள்.” என்கின்ற வாதத்தை அவர் நீதிமன்றத்தில் எடுத்து வைத்து இருக்கிறார்.

‘கேரவன்’ இதழ் மிகவும் அதிர்ச்சிகரமான இன்னொரு தகவலையும் வெளியிட்டு இருக்கிறது. அது மிகவும் முக்கியமானது. இந்த டிரஸ்ட் இருக்கிறதே, இது கோவிலை மட்டும் கட்டவில்லை, மிகப்பெரிய ரியல் எஸ்டேட் - மாஃபியா தொழிலையும் இந்தக் காலக் கட்டத்தில் டிரஸ்ட்டின் பெயரால் செய்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

அங்கே வஃப் வாரியத்தின் நிலம் இருக்கிறது. ஏராளமான தனியார் நிலங்கள் இருக்கிறது. ஆலயத்திற்குச் சொந்தமான பல நூறு ஹெக்டேர் நிலங்கள் இருக்கிறது. எல்லா நிலங்களையும் குறைந்த விலைக்கு வாங்கி, மிக அதிகமான விலைக்கு இந்த ராமஜென்ம பூமி தீர்த்த சேத்ரா டிரஸ்ட்டுக்கு கை மாற்றி இருக்கிறார்கள்.

உத்தரப்பிரதேசத்தில் 2006-இல் நிறைவேற்றப்பட்டு இருக்கின்ற நில வருவாய்ச் சட்டம் சில வழிகாட்டுதல்களை உள்ளடக்கியதாக இருக்கிறது.

அந்தச் சட்டத்தின் வழிகாட்டுதல்களை எல்லாம் மீறி இந்த நிலங்கள் மிகக் குறைந்த விலைக்கு வாங்கப்பட்டு அதிகமான விலைக்கு டிரஸ்ட்டுக்கு விற்கப்பட்டு இருக்கிறது.

இந்த டிரஸ்டில் இருக்கின்ற பல பேர், இந்த ராமர் ஆலயத்தின் பெயரால் ஒரு ரியல் எஸ்டேட் தொழிலைப் பார்த்து பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயை இந்தக் காலத்தில் சேர்த்து இருக்கிறார்கள். இவ்வாறு அதிர்ச்சிகரமான தகவலை ‘கேரவன்’ இதழ் வெளியிட்டு இருக்கிறது.

இதனைவிட மிகவும் முக்கியமான விஷயம்.

ஆலய கட்டுமானப் பணியை அடிக்கல் நாட்டும் பணியை பிரதமர் மோடி துவக்கி வைக்கப் போனார். அப்போது அத்வானிக்கு அழைப்பு இல்லை, அன்றைக்கு உத்தரப்பிரதேச முதலமைச்சர் கல்யாண்சிங்குக்கு அழைப்பு இல்லை, முரளி மனோகர் ஜோஷிக்கு அழைப்பு இல்லை, உமாபாரதிக்கு அழைப்பு இல்லை.

அப்போது கொரோனா தொற்று உச்சத்தில் இருந்த நேரம். இவர் அடிக்கல் நாட்டவிருந்த அந்த நாளில் மட்டும் 852 பேர் கொரோனாவால் இந்தியாவில் இறந்துபோய் இருக்கிறார்கள். 52 ஆயிரம் நோயாளிகள் இருந்தார்கள். அன்றைக்கு தான் இவர் அடிக்கல் நாட்டு விழாவிற்குப் போனார். இவர்களுக்கு எல்லாம் அழைப்பு அழைக்கப்படாததற்கு ஒரு காரணம் மோடி தரப்பில் முன் வைக்கப்படுகிறது.

என்னவென்றால் கொரோனா நோய் பரவிக் கொண்டிருக்கின்றது. இப்போது நீங்கள் எல்லாம் 70 வயதைக் கடந்து விட்டீர்கள். உங்களுடைய எதிர்காலத்தையும், பாதுகாப்பையும் கருதி நீங்கள் வரவேண்டாம் என்று சொன்னார்கள். சரி இப்போது ஜனவரி 22-க்கு இவர்களைக் கூப்பிடுகிறார்களா என்றால் அதுவும் இல்லை!

இப்போது என்ன காரணம் சொல்லப்படுகிறது என்றால், அத்வானிக்கோ, ஜோஷிக்கோ, உமாபாரதிக்கோ, கல்யாண்சிங்கிற்கோ அழைப்பில்லை.

“இப்போது அயோத்தியில் அதிகமான குளிர் நிலவுகிறது. உங்களுடைய உடல்நலத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, நீங்கள் அதிகமான குளிரில் வரவேண்டாம்” என்று சொல்கிறார்கள்.

அன்றைக்கு ஒரு காரணம் சொல்வதற்கும், இன்றைக்கு ஒரு காரணம் சொல்வதற்கும் பின்னணியில் மோடியினுடைய அரசியல் இருக்கிறது.

என்னவென்றால், ஆலயத் திறப்பு விழாவிற்கு அத்வானியும், உமாபாரதியும் வந்தால் அவர்கள்தான் உயரமாகத் தெரிவார்கள், மோடி குள்ளமாகத் தெரிவார்.

அப்போது அவர்களைத் தள்ளி வைத்துவிட்டு, தான் மட்டுமே இந்தச் சாதனைக்குச் சொந்தக்காரனாக இருக்க வேண்டும் என்று மோடியினுடைய ஒரு சுயநல அரசியல் இதற்குப் பின்னால் இருக்கிறது.

இப்படி எல்லாவற்றையும் கடந்து, வரக்கூடிய 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்த ஆலயக் கட்டுமானத்தை தன்னுடைய அரசியல் வெற்றிக்காக இணைக்கின்ற ஒரு அருவருப்பான அஜெண்டாவாகத் தான் இந்த ராமர் ஆலயத் திறப்பு விழா என்பது இருக்கிறது.

அதானி ஊழலை பார்த்திருக்கிறோம், ரஃபேல் ஊழலை பார்த்திருக்கிறோம்,

பி.எம்.கேர்ஸ் ஊழலை கேள்விப்பட்டு இருக்கிறோம்.

அதேபோல ராமர் ஆலயத்தின் பெயரால் நடைபெற்று இருக்கின்ற பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய் என்பது இதற்குப் பின்னால் நாம் பேச வேண்டிய உண்மையாக இருக்கிறது.

நம்பக்கூடியவர்களுக்கு ராமர் கடவுள். ஆனால்; மோடி, ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.விற்கு ராமர் ஒரு பிராண்ட்; அவ்வளவுதான்!

மக்களால் நம்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு கடவுளை, தனக்கான ஒரு பிராண்டாக மோடி உருவாக்கியிருக்கிறார். இந்த ராமர் என்கின்ற பிராண்டை முன்வைத்து 2024 நாடாளுமன்றத் தேர்தலில் அவர் நிற்கப்போகிறார்.

அப்போது கடவுளை நம்புகின்றவர்களும் சரி, நம்பாதவர்களும் சரி; ஆன்மிகமும், அரசியலும் இரண்டும் வெவ்வேறாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றவர் களும் சரி, இதில் மறைக்கப்பட்டு இருக்கின்ற எல்லா உண்மைகளையும் கணக்கெடுத்துக்கொண்டு, நாடாளுமன்றத் தேர்தலில் ராமரையும் விட்டு வைக்காத மோடியினுடைய சுயநலத்தைத் தோலுரித்து விவாதிப்பது தான் மிக முக்கியமான பிரச்சினை.

இவ்வாறு ஆர்.பத்ரி “தீ” (தீக்கதிர்) இணையதள தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.




சேலத்தில் நடைபெற உள்ள தி.மு.க. இளைஞரணி 2வது மாநில மாநாட்டுக்கான நிதியாக ரூபாய் பத்து லட்சத்திற்கான வரைவோலையை இராமநாதபுரம் மாவட்ட இளைஞரணி சார்பில், இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் மாவட்ட அமைப்பாளர் கே.சம்பத்ராஜா வழங்கினார். மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் இன்பா ஏ.என்.ரகு, ஜீ.பி.ராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ரமேஷ் கண்ணா, குமரகுரு ஆகியோர் உடன் உள்ளனர்.




ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப்போட்டி 2023 விழிப்புணர்வு வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தனர். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.எ.பிரதீப், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்தராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் ராஜப்பா, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் கமலக்கண்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார் உட்பட பலர் உள்ளனர்.

### சேலம் – இளைஞரணி 2வது மாநில மாநாட்டிற்கு

# நெல்லை மத்திய மாவட்டம் சார்பில் 1000 பேர் சீருடையுடன் பங்கேற்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை.ஜன.20-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு.

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் நாளை (21.01.2024 - ஞாயிற்றுக்கிழமை) சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் மாநில உரிமை மீட்பு முழக்க தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட மற்றும் மாநகர இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி சீருடையுடன் 1000ம் இளைஞர்களை அழைத்துச் செல்வது என முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி இன்று (20.01.2024) மதியம் 2 மணியளவில் மாவட்ட கழகத்திலிருந்து 20 பேருந்துகளில் அழைத்து செல்லப்படுகிறார்கள்.அவர்களுக்கு தங்குவதற்கு நாமக்கல் மாவட்டம் மணியனூரில் பரமத்தி திருச்செங்கோடு சாலையில் அமைந்துள்ள கொங்கு வேளாளர் கல்யாண மண்டபம் மற்றும் அன்னமார் கோவில் திருமண மண்டபம் ஆகிய இரு திருமண மண்டபங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அங்கு மாநாடு செல்லும் இளைஞர்களுக்கு (20.01.2024) இரவு உணவு மற்றும் (21.01.2024) மாநாட்டு அன்று காலை உணவும்,இரவு உணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது மற்றும் மதிய உணவு மாநாடு குழுவினரால் மாநாட்டு பந்தலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட மற்றும் மாநகர இளைஞரணி நிர்வாகிகள் தாங்கள் கூறியபடி கழக இளைஞர்களை அழைத்து வந்து மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.இதுபோல மத்திய மாவட்ட ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட கழக செயலாளர்கள்,நிர்வாகிகள்,கழக சார்பு அணி நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு டி.பி.எம். மைதீன்கான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### சேலம் – இளைஞரணி 2வது மாநில மாநாடு – சங்கரன்கோவிலில்

# தென்காசி வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

சங்கரன்கோயில், ஜன. 20 -

தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சேலத்தில் நாளை 21ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் இளைஞர் அணி 2வது மாநில மாநாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சங்கரன்கோவிலில் உள்ள தென்காசி வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் யு.எஸ்.டி.சீனிவாசன்,

பரமகுரு, மாவட்ட துணை செயலாளர் மனோகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாநில மருத்துவர் அணி இணை செயலாளர் டாக்டர்.செண்பக விநாயகம் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட பொருளாளர் இல.சரவணன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று ஆலோசனை வழங்கி பேசியதாவது:-

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி

ஏற்கனவே மாவட்ட கழகம் சார்பில் நடைபெற்ற கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவின்படி வெண் சீருடையுடன்இளைஞர்களை அதிக அளவில் அழைத்துச் சென்று மாநாடு வெற்றி பெற முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

தென்காசி வடக்கு மாவட்டத்தில் இருந்து செல்ல இன்று (20.01.2024 -சனிக்கிழமை)வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டிற்கு வருபவர்களுக்கு சேலம் அருகே தங்கும் வசதி,உணவு வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளை (21ஆம் தேதி) மாநாடு அன்று மதிய உணவு மாநாட்டு குழுவினால் மாநாட்டு பந்தலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் தென்காசி வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், இளைஞர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், கடற்கரை, பெரியதுரை, மதிமாரிமுத்து, கிறிஸ்டோபர், பூஜை பாண்டியன், சேர்மத் துரை, ராமச்சந்திரன், நகர செயலாளர் அந்தோணிசாமி (புளியங்குடி) பொதுக்குழு உறுப்பினர்கள் மாரிச்சாமி, தேவா, மகேஸ்வரி, பராசக்தி, பத்திரம் சாகுல் ஹமீது, பேரூர் செயலாளர்கள் ரூபி பால சுப்பிரமணியன், கே.டி.சி குருசாமி, மாரிமுத்து, மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞரணி அமைப்பாளர் முகேஷ், மாணவரணி உதயகுமார், வழக்கறிஞரணி பிச்சையா, மகளிர் அணி சிவசங்கரி, மகளிர் தொண்டரணி விஜயா, நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி சரவணன்,

விவசாய அணி மாடசாமி,இலக்கிய அணி குருவசந்த், பொறியாளரணி பசுபதி பாண்டியன், சிறுபான்மையினர் நல அணி நாகூர் கனி, நெசவாளர் அணி சந்திரன், மருத்துவரணி மணிகண்டன்,

தொழிலாளரணி சரவணன், விவசாய அணி சேதுராமன், அமைப்புசாரா ஓட்டுநரணி முருகன், மீனவரணி சாமுவேல், வர்த்தக அணி சரவணகுமார், தொண்டரணி அப்பாஸ் அலி, துணை அமைப்பாளர்கள் சரவணன், கார்த்தி, ராஜராஜன், அன்சாரி, மணிகண்டன், சிவாஜி, தொ.மு.ச. மகாராஜன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட துணை செயலாளர் நன்றியுரையாற்றினார்.

### அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் – தி.மு.க. இளைஞர் அணி

# 2 வது மாநில மாநாட்டில் 5000 இளைஞர்கள் பங்கேற்க முடிவு!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், ஜன. 20 -

அரியலூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம்,மாவட்ட கழக அலுவலகத்தில் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நடைபெற்ற மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கலந்து கொண்டு (21 ஆம் தேதி) சேலம் பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டிற்கு நமது மாவட்டத்தில் இருந்து இளைஞரணியினர் 5000 பேரும், கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் எனவும்,மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், இளைஞரணி மற்றும் கழக நிர்வாகிகளுடன் உரையாற்றினார்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

நாளை ஜனவரி 21 ஆம் தேதி சேலம் பெத்தநாயக்கன் பளையத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞரணி மாநில இரண்டாவது மாநாட்டிற்கு அரியலூர் மாவட்டத்தில் இருந்து 5000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள், கழக தோழர்கள் பெருமளவில் கலந்துகொள்வது என தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் மு. கணேசன், சி. சந்திரசேகரன்,

லதா பாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், வா. சௌந்தரராஜன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, ரெங்க. முருகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ. கொ. கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் கோபால கிருஷ்ணன், அல்போன்ஸ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயி கதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, சி.ஆர்.எம். பொய்யாமொழி, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# முரசொலியில் வெளிவந்த பாசறைத் தொகுப்பு அடங்கிய 9 நூல்கள்!

## பொள்ளாச்சியில் உள்ள கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டன! தென்றல் செல்வராஜ் தலைமையில்!

பொள்ளாச்சி, ஜன. 20 -

இளைஞர் நலன் மட்டும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் "முத்தமிழறிஞர் பதிப்பகத்தை" தொடங்கி வைத்து முரசொலியில் பாசறையில் வெளிவந்த வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்புடன் வெளிவந்த வெளியிடப்பட்ட 9 நூல்கள் அடங்கிய புத்தகங்களை

நேற்று பொள்ளாச்சியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நல்ல முத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பி.ஏ. பொறியியல் கல்லூரி மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் உள்ள அனைத்து நூலகங்களுக்கும் கழக சட்ட திட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் வழங்கப்பட்டது

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.அமுத பாரதி, நகர மன்ற துணை தலைவர் எஸ்.கௌதமன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.ஏ.செந்தில்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணிமாறன் தென்றல், சபரி கிருஷ்ணன், முன்னாள் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அரவிந்த் வசந்த்ராம், வட்ட செயலாளர் நாகேந்திரன், வட்ட பிரதிநிதி லோகநாதன், பொள்ளாச்சி நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விக்னேஷ் பிரபு,

நகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், கௌதம், தாஸ்பிரபு, ஹரிபிரகாஷ், ஆட்டோ பஞ்சலிங்கம், பாண்டிதுரை, பிரகாஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர் மேலும் முரசொலி பாசறையில் வெளிவந்த 9 நூல்கள் அடங்கிய தொகுப்பு தேவைப்படும் நூலக நிர்வாகிகள் 9344811007. எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம் என்று தென்றல் செல்வராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி ,பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியம்,பையர்நத்தம் ஊராட்சி மன்றத்தின் சார்பில் தமிழர் திருநாளாம் தை முதல் நாள் தமிழ்ப்புத்தாண்டு மற்றும் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் அனைத்து சமுதாய மக்கள் பங்குபெற்ற சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது.ஒன்றிய குழு உறுப்பினர் கண்ணன்,ஊராட்சிமன்ற துணை தலைவர் சிவகாமி செல்வம் மற்றும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### சேலம் இளைஞரணி மாநாட்டுச் சுடர் ஓட்டத்திற்கு

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் சிறப்பான வரவேற்பு!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில்!

விழுப்புரம், ஜன. 20 -

சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு சுடர் ஓட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளித்து மாவட்டத்தில் சுடர் ஓட்டத்தை துவக்கி வைத்தார்

சேலத்தில் நாளை ( 21.1.2024 ) இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு நடைபெறுவதையொட்டி நேற்று கழக இளைஞர் அணி செயலாளர்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து சேலத்திற்கு சுடர் ஓட்டத்தை தொடங்கிவைத்தார்,

சென்னையை தொடர்ந்து செங்கல்பட்டு,மதுராந்தகம் வழியாக விழுப்புரம்

வடக்கு மாவட்டம் திண்டிவனத்திற்கு நேற்று காலையில் வந்தடைந்த சுடர் ஓட்டம் சுடருக்கு அமைச்சர் செஞ்சிமஸ்தான் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது,

சுடரை ஏந்தி வந்த விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தானிடம்

ஒப்படைத்தபின் இளைஞர் எழுச்சி வீரவணக்க முழக்கங்களை எழுப்பி சுடர் ஓட்டத்தை அமைச்சர் செஞ்சிமஸ்தான் துவக்கி வைத்தார்,

இதைத் தொடர்ந்து மயிலம் ஒன்றியம் கூட்டேரிப்பட்டில்மாநாடு சுடர்ஓட்டத்திற்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளித்துஇளைஞரணி மாநாடு சுடர் ஓட்டத்தை வரவேற்றனர். இதைத் தொடர்ந்து மாநாடு சுடர் ஓட்டம் விழுப்புரம் சென்றடைந்து.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன் ,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர்,துணைச் செயலாளர் ரவிக்குமார்,பொருளாளர் ரமணன் ,நகர செயலாளர் கண்ணன்,நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், மரக்காணம் தயாளன், ஒலக்கூர் சொக்கலிங்கம்,மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன்,நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், ராஜாராமன்,பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன்,அண்ணாதுரை, துரை. இளம்வழுதி, பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன்,செல்வராஜ், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ராஜசக்தி,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கோபிநாத், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி, முன்னாள் துணை செயலாளர் அசோகன்,மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சிவகாமி,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம்.டி. பாபு, டி. கே. பி .ரமேஷ் அண்ணாமலை,வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கன்னியப்பன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் முத்தமிழறிஞர் பதிப்பகத்தை தொடங்கி வைத்து முரசொலியில் பாசறையில் வெளிவந்த வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்புடன் வெளிவந்த வெளியிடப்பட்ட 9 நூல்கள் அடங்கிய புத்தகங்களை நேற்று பொள்ளாச்சியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பி.ஏ.பொறியியல் கல்லூரி மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் உள்ள அனைத்து நூலகங்களுக்கும் கழக சட்ட திட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் வழங்கப்பட்டது.




தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘சென்னை சர்வதேச புத்தகக் கண்காட்சி 2024’ இன் 2வது பதிப்பின் பாராட்டு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றார். இந்த மூன்று நாள் நிகழ்வின் போது 40 நாடுகளைச் சேர்ந்த வெளியீட்டாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் தங்கள் நுண்ணறிவைப் பகிர்ந்து கொண்டனர். தமிழ் இந்தோ–ஐரோப்பிய ஒப்பீட்டு அகராதியை வெளியிட்டு, திராவிட முன்மாதிரி அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் எப்படி இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் வாசிப்புப் பண்பாட்டை ஊக்குவித்து வருகின்றனர் என்பதை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி பங்கேற்றனர்.



தி.மு.கழகத்தின் தலைமை கழகப் பேச்சாளர்கள் 350 பேருடன் கலந்துரையாடி அவர்களுக்கு பொங்கல் பரிசுகளை கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் திருச்சி சிவா எம்.பி. உள்ளிட்ட கழக முன்னணியினர் பங்கேற்றனர். நாட்டுக்காக வாளேந்திய வீரர்களைப் போல தி.மு.கழகத்துக்காக சொல்லேந்திய வீரர்கள் நம் கழக பேச்சாளர்கள். கடுமையான சோதனைகளையும், நெருக்கடிகளையும் சந்தித்த பிறகும் கழகம் வலுவோடு திகழத் தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் நம் கழக பேச்சாளர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளே முக்கியக் காரணம். மாறிவரும் நவீன உலகில் நமது பிரச்சாரங்களும் உரைகளும் எப்படி அமைய வேண்டும் எனக் கூறினார். ஆயிரமாயிரம் மேடைகள் கண்ட மூத்த பேச்சாளர்களும் வளர்ந்து வருகின்ற இளம் பேச்சாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## உங்களுக்கு உதவிட நாங்கள் எந்நேரமும் தயாராக இருக்கிறோம்!

# கழகம் என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்கும்!

### தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜன. 20–**

**சென்னையில் நடைபெற்ற கழகச் சொற்பொழிவாளர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது “உங்களுக்கு உதவிட எந்நேரமும் நாங்கள் தயாராக இருக்கிறோம்! நீங்கள் இல்லாமல் கழகம் இல்லை” என்று உருக்கமுடன் கூறினார்.**

சென்னையில் நேற்று முன்தினம் (18.1.2024) தலைமைக் கழக சொற்பொழிவாளர்களுடன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து உரையாடி அவர்களுக்கு தமிழர் திருநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி., தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:

“இந்த நிகழ்ச்சியைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அண்ணன் திருச்சி சிவா அவர்கள் என்னை தூக்கி வளர்த்தவர். அவருக்கும் தலைமைக் கழக சொற்பொழிவாளர்களுக்கும், வந்திருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் முதலில் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சி, ஒரு வித்தியாசமான நிகழ்ச்சி. பொங்கலுக்கு முன்பாகவே இந்த நிகழ்ச்சியை நடத்தவேண்டும் என்று திட்டமிட்டிருந்தோம். ஆனால், தொடர்ந்து மாநாட்டுப் பணிகள், அரசு பணிகள் இருந்தன. அதனால் பொங்கலுக்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு சரியாக திட்டமிட்டு இந்த நிகழ்ச்சி இவ்வளவு சிறப்பாக இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**என்னுடைய நன்றி!**

முதலில் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன். நான் உங்களை எல்லாம் சந்திக்கும்போது உங்களுக்கு ஒரு நினைவு பரிசு தர வேண்டும் என்று நினைத்து ஏற்பாடு செய்திருந்தேன். ஆனால், ஆச்சரியம் என்னவென்றால், நீங்கள் ஒவ்வொருவரும், உங்களுடைய நினைவு பரிசை அளித்திருக்கிறீர்கள். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றி.

நான் கழகத்தின் மூத்த முன்னோடிகளையெல்லாம் சந்தித்துப் பொற்கிழி வழங்கும்பொழுது ஒரு நிகழ்ச்சியை அடிக்கடி சொல்வேன். தந்தை பெரியாரை நான் நேரில் பார்த்ததில்லை, பேரறிஞர் அண்ணாவையும் பார்த்தது இல்லை. கலைஞரை நேரில் பார்த்திருக்கிறேன், இனமானப் பேராசிரியர் தாத்தா அவர்களை நேரில் பார்த்திருக்கிறேன். ஆனால், கழகத்தின் மூத்த முன்னோடி கள் உங்களையெல்லாம் பார்க்கும்போது பொறாமையாகவும் அதேசமயம் பெருமையாகவும் இருக்கும். ஏனென்றால், நீங்கள் அத்தனை பேரும் தந்தை பெரியாரை நேரில் பார்த்திருப்பீர்கள்.

தந்தை பெரியாருடன் போராட்டக் களத்திற்குச் சென்றிருப்பீர்கள். சிறைவாசம் செய்திருப்பீர்கள் பேரறிஞர் அண்ணாவுடன் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்றிருப்பீர்கள். பொதுக் கூட்டங்களுக்குச் சென்றிருப்பீர்கள். எனவேதான் உங்களை எல்லாம் பார்க்கும் பொழுது எனக்குப் பொறாமையாக இருக்கிறது என்று சொல்வேன்.



அடுத்தது இன்னொரு வரியும் சொல்வேன் அது என்னுடைய உள்ளத்தில் இருந்து வருகின்ற வார்த்தை. வந்திருக்கக் கூடிய உங்கள் அத்தனை பேரையும் தந்தை பெரியாரின் மறு உருவமாக, பேரறிஞர் அண்ணாவின் மறு உருவமாக முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மறு உருவமாக நம்முடைய இனமான பேராசிரியர் தாத்தாவின் மறு உருவமாகத்தான், இங்கு வந்திருக்கக்கூடிய ஒவ்வொருவரையும் நான் பார்க்கின்றேன்.

**மிகுந்த உணர்ச்சிபூர்வமாக இருக்கிறது!**

ஏனென்றால், ஒவ்வொருவரையும் அந்தந்த மாவட்டங்களுக்கு வரும் பொழுது பலமுறை சந்தித்து இருக்கிறேன். புகைப்படம் எடுத்திருக்கிறேன். ஆனால், கழகப் பேச்சாளர்கள் அத்தனை பேரையும் ஒரே இடத்திற்கு வரவழைத்து, உங்களைச் சந்திப்பதில் மிகுந்த உணர்ச்சிபூர்வமாக இருக்கிறது. இதைச் செய்யச் சொல்லி கட்டளையிட்டது, நம்முடைய கழகத் தலைவர் அவர்கள்.

இந்தத் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதில், ஒரு சின்னச் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது, ஒரு தயக்கம் ஏற்பட்டிருக்கிறது அதைச் சரிசெய்ய வேண்டும். அதற்குக் காரணம் நீங்கள்தான். வேகத்தில் ஆதங்கத்தில் எதையாவது பேசி விடுகிறீர்கள். அ.தி.மு.க.வாக இருக்கட்டும் பா.ஜ.கவாக இருக்கட்டும். நாம் பேசுவதை எல்லாம் வெட்டி ஒட்டி, அவதூறு பரப்புகிறார்கள். எனவே உங்களிடம் நான் கேட்டுக் கொள்வது கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு நம்முடைய பேச்சுக்கள் இருக்க வேண்டும். கண்டிப்பாக நான் உங்களுக்குப் பாடம் எடுக்கத் தேவையில்லை. நீங்கள் எல்லோரும் எனக்கு பாடம் எடுக்கக் கூடியவர்கள். அந்தளவுக்கு நீங்கள் சீனியர்கள்.

கலைஞருடைய நூற்றாண்டில் கலைஞருடைய பெருமைகளை எல்லாம் பேசுகிறோம். கலைஞர் ஐந்து முறை தமிழ்நாட்டை ஆண்டார். ஐந்து முறைதமிழகத்தின்முதலமைச்சர். அப்படி என்றால், அதற்கு இங்கே வந்திருக்கக்கூடிய கழகத்தின் பேச்சாளர்களாகிய நீங்கள் முக்கியமான காரணம்.

நீங்கள் இல்லாமல் கலைஞர் கிடையாது. நீங்கள் இல்லாமல் இந்த ஆட்சி கிடையாது. நீங்கள் இல்லாமல் நம்முடைய தலைவர் கிடையாது. நீங்கள் இல்லாமல் தி.மு.க கிடையாது. எனவே உங்களையெல்லாம் சந்திப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி.

**கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்!**

நம் கழகத் தலைவர் அவர்களிடம் பேசி தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க முயற்சி செய்வேன். வந்திருக்கக்கூடிய பலர், சில கோரிக்கைகளை வைத்து இருக்கிறீர்கள், மனுக்கள் கொடுத்திருக்கிறீர்கள். கண்டிப்பாக ஒவ்வொரு மனுவாக எடுத்து, அதை ஆய்வு செய்து, அதைத் தீர்ப்பதற்கான அனைத்துப் பணிகளிலும் என்னை ஈடுபடுத்திக் கொள்வேன்.

இது தொடக்கம்தான். இன்னொரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும். இது சமூக வலைத்தள யுகம். தெருமுனைக் கூட்டங்களில் பேசுவதை மாதிரி யூ ட்யூபில் பேச முடியாது அதற்கென்று ஒரு ஸ்டைல் இருக்கிறது.

டிவி இன்டர்வியூவில் பேசுவது மாதிரி, ஒருத்தர் பிரச்சாரக் கூட்டத்தில் பேச முடியாது. எனவே, இப்போது சோசியல் மீடியா அதிகமானதால், நீங்கள் அத்தனை பேரும் சோசியல் மீடியாவிலும் நீங்கள் ஆக்டிவாக இருக்க வேண்டும்.

**யூ ட்யூப் சேனல் தொடங்குங்கள்!**

நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு youtube சேனல் ஆரம்பிக்க வேண்டும். அதற்கு அன்பகத்திலிருந்து எங்களுடைய டீம் உங்களுக்குத் துணை புரியும். அதே போல் உங்களுக்கு எந்தவிதமான மருத்துவ உதவியாக இருந்தாலும், உங்களுடைய குடும்பத்தில் இருக்கக்கூடிய குழந்தைகளின் கல்வி உதவியாக இருந்தாலும் அன்பகத்தில் இருந்து உங்களுக்கு எந்நேரமும் உதவுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.


அது மட்டுமல்ல, இன்று உங்களையெல்லாம் அழைத்ததற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது சேலத்தில், நம் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு வருகின்ற 21ம் தேதி நடக்க இருக்கின்றது. அதற்கு உங்களிடம் வாழ்த்து வாங்குவதற்காகத்தான் இந்த நிகழ்ச்சியை நடத்துகிறோம். உங்களுடைய வாழ்த்துக்களோடு அந்த இளைஞர் அணி மாநாடு சிறப்பாக நடைபெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

தமிழ்நாட்டின் பல ஊர்களில் இருந்து வந்திருக்கிறீர்கள். பத்திரமாக நீங்கள் அனைவரும் ஊருக்குச் சென்று சேர வேண்டும்.

அண்ணன் திருச்சி சிவா அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின் றேன். நன்றி ,வணக்கம்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, இளையராஜா, அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், பிரபு கஜேந்திரன், ஜி.பி. ராஜா, ஆனந்தகுமார், மேலாளர் பத்மநாபன் உள்ளிட்ட அறிவாலயம் பணியாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



கலைஞர்100 என்ற தலைப்பில் திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாதம் தோறும் பத்து நிகழ்ச்சி என இது வரை 73 நிகழ்ச்சிகள் முடிக்கப்பட்டு இன்று 74 நிகழ்ச்சியானது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி ”ஊர்கள் தோறும் தி.மு.க. எனும் செயல்திட்டத்தை மாவட்டக் கழகங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என கழகத் தலைவர் அவர்கள் ஆணையிட்டார். அதனை நிறைவேற்றும் விதமாக திருச்சி (தெ) மாவட்டத்திற்குட்பட்ட மாநகரம், நகரம், பேரூர், ஒன்றிய கழகங்களில் கழக இருவண்ணக் கொடியேற்றி கலைஞர் புகழ் போற்றினோம். அதன் தொடர்ச்சியாக திருச்சி கிழக்கு மாநகர தி.மு.க சார்பாக, மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில், மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் தலைமையில், திருச்சி பெரியகடை வீதியில் அமைக்கப்பட்ட 100’வது கழகக் கொடிக்கம்பத்தில் அமைச்சர் கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். ராமச்சந்திரன் கழகக் கொடியேற்றி, கழகத்தின் 100 மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், கே.என்.சேகரன், பி.எம்.சபியுல்லா, பகுதிச் செயலாளர் மோகன் மற்றும் மாவட்ட மாநகர நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், கழக உடன் பிறப்புகள் திரளாக கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, காணொலிக் காட்சி வாயிலாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக, கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அரசு மருத்துவமனையை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி ரூ.100 கோடி மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிக்கு நேற்று முன்தினம் (18.01.2024) அடிக்கல் நாட்டியதையடுத்து, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ.செல்லக்குமார், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் முன்னிலையில் அரசு தலைமை மருத்துவமனை கட்டுமானப் பணிகளை நேற்று முன்தினம் (18.01.2024) துவக்கி வைத்தார். உடன், ஒசூர் சார் ஆட்சியர் செல்வி.பிரியங்கா, இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பரமசிவம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# உடன்பிறப்பே... 41

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த வை.பெருமாள் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## பாட்டாளிகளின் உயிர்த்தோழன் வை.பெருமாள்

ஓவியம் : ரவி பேலட்



*2001* ஆம் ஆண்டு தமிழ்நாட்டு வரலாற்றில் அப்போதைய ஆட்சியாளர் அம்மையார் ஜெயலலிதா அவர்களால் ஒரு களங்கம் விளைவிக்கப்பட்ட ஆண்டு . அந்தச் சம்பவம் கழகத்தினருக்குக் கறுப்புப் பக்கமாக எழுதப்பட்டது. ஆம், திராவிடச் சிந்தனைகளின் பேருருவமாக, தந்தை பெரியார் , அறிஞர் அண்ணா ஆகியோரிடம் அரசியல் கற்றுக்கொண்ட, அதுவரை தமிழ்நாட்டில் நான்கு முறை முதல்வராகப் பதவி வகித்த, தமிழ் நிலத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் மதிநுட்பம் கொண்டவராக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் ஒரு நள்ளிரவில் கைது செய்யப்பட்டார்.

அராஜகம் எனில் அப்படி ஒரு அராஜகம், சட்டம் ஒழுங்கை எல்லாம் காற்றில் பறக்க விட்டு, அராஜக ஆட்சியின் உச்சமாக மூத்த அரசியல்வாதி கலைஞர் கைதுக்கு இந்திய அரசியல் தலைவர்கள் எல்லாம் கண்டனம் தெரிவித்தனர். கழகத்தினர் தலைவரின் சொல்லுக்கிணங்க கட்டுக்கோப்புடன் அறப்போராட்டங்களில் இறங்கினர்.12.8.2001 அன்று சென்னையில் கழகத்தினர் திரண்ட கண்டனப் பேரணி தொடங்கியது.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை அணிக்குத் தலைமை தாங்கிச் சென்றார் அப்போது சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த வை.பெருமாள். ஜெயலலிதா ஆட்சி அராஜகத்தின் உச்சமாக அன்று கழகத்தினர் மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதல் காட்சிகளைக் காண சகிக்காமல் மயக்கமடைந்து கண் மூடினார் அந்த உடன் பிறப்பு. மருத்துவமனை கொண்டு செல்லப்பட்ட அவர் திரும்பவும் கண் திறக்காமலேயே அடுத்த நாள் இயற்கையில் கலந்தார். அப்போது கழகத்தின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் பொதுச் செயலாளராகவும் இருந்தார் வை.பெருமாள்.

### மாணவர் தி.மு.க வார்ப்பு

*1948* ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் தேதி பிறந்தவர் வை.பெருமாள். மாணவப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தின் மீது கொண்ட பற்று காரணமாக தி.மு.க கழகத்தில் இணைந்து செயல்படலானார். அண்ணாவின் கருத்துகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர் பெருமாள்.1965 களில் தொடங்கிய அந்தப் பற்று, கலைஞர் ஆளுமையின் கீழ் தொடர்ந்ததுடன், கழகப் போராட்டக் களத்தில் அவர் உயிர் பிரியும் வரையிலும் நெஞ்சுக்கு நீதியாகத் திகழ்ந்தது.

உணர்ச்சிப் பிழம்பாக அனல் பறக்கும் அவரது மேடைப் பேச்சுகள் கழகத்தினர் மத்தியில் அவருக்கான அடையாளத்தை உருவாக்கித் தந்தன. “பௌராணிக பாஷையிலே சொல்ல வேண்டுமென்றால், கழகத்தின் ‘பீம சேனன்’ பெருமாள்” எனக் குறிப்பிடுகிறார் கலைஞர்.

திடகாத்திர உருவமும், கம்பீரமான குரலும் அவரை தொழிலாளர்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் வழித்துணையாக இருந்தன. அவர் பூர்வீகம் சென்னை அல்ல, கரூர் அருகே உள்ள பரமத்தி வேலூர்க்காரர். ஆனால், கழகப் பணி அவரை சென்னைவாசி ஆக்கியது. தொ.மு.ச பேரவையில் மிகச் சிறப்பாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

> **“அந்த உருவமா சாய்ந்து விட்டது என நானும் எண்ணியெண்ணிப் பார்த்தேன், ஏங்கியேங்கித் தவித்தேன்” என கலைஞரின் பேனா ஏக்கம் கொண்டது.**

*30* ஆண்டுகளுக்கும் மேலாக தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு, தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச் செயலாளர் என்கிற நிலைக்கு வளர்ந்தார்.

### போராட்டக் களமே அடையாளம்

*1994* ஆம் ஆண்டு சென்னையில் குடிநீர் பிரச்சினை தலைவிரித்து ஆடிய போது அப்போதைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய நமது முதலமைச்சர் அவர்களின் தலைமையில், சென்னையில் மிகப்பெரிய மறியல் போராட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர் பெருமாள். தவிர, கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறைசென்றவர்.

*1996* தேர்தலின்போது தலைவர் கலைஞர் அவர்களுடன் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்யும் வாய்ப்பு கிடைக்கப்பெற்ற நம்பிக்கையான மெய்வீரனாக உடன் சென்றவர் பெருமாள். அந்த நம்பிக்கையின் பரிசே, அடுத்தத் தேர்தலில் அவருக்குக் கிடைத்த வாய்ப்பு. அதுவும் தான் வெற்றி பெற்ற சைதை தொகுதியிலேயே அவருக்கும் வெற்றியைப் பெற்றுத் தந்தார் கலைஞர்.

### தொ.மு.ச பேரவைப் பணி

தொ.மு.ச பேரவைச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் என அடுத்தடுத்து கழகப் பொறுப்புகளும், மக்கள் பொறுப்புகளும் தேடி வந்த போது, கழக அறப்போர்க் களமே அவர் கண் மூடும் களமாக அமைந்தது.

கூட்டுறவுத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்களை நிரந்தரமாகவும், சென்னை மாநகராட்சியில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்களை நிரந்தரமாகவும், கலைஞரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதை நிறைவேற்றி முடித்தவர் பெருமாள். பேரவைப் பணிகள் எனில், அதைப் பரபரப்புடன் செய்து முடிப்பவர் பெருமாள் எனப் பெயர் எடுத்திருந்தார் .அதனால்தான் ‘பாட்டாளிகளின் உயிர்த் தோழன்’ என கலைஞர் கண்ணீர் வடித்தார்.

பெருமாள் மறைந்த அன்று, கழகத்தினர் சந்தித்த பல்வேறு துயரச் செய்திகளையும் தாங்கிக் கொண்டே,

“பாட்டாளிகளின் உயிர்த்தோழன் என் ஆருயிர் தம்பி பெருமாள் மறைந்துவிட்டாரா?” என தலைவர் கலைஞர் எழுதிய இரங்கலில்,

‘நம்பவே முடியவில்லையே! நேற்றைக்கு அவர் கண்டன ஊர்வலத்தில் முழக்கமிட்டு சிங்க நடைபோட்டு வந்த காட்சியைக் கண்டேனே. கண்டனப் பேரணியில் காவல்துறையினரும், அ.தி.மு.க. குண்டர்களும் நடத்திய வெறியாட்டத்திற்கு நடுவே உயிரிழந்த உடன்பிறப்புகளில் அவரும் ஒருவராகிவிட்டாரே!”என கலங்கினார் கலைஞர். கலங்கியது மட்டுமல்ல, சட்டமன்றத்தில் வை.பெருமாளுக்கு இரங்கல் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றவும், இறப்பினை விவாதித்துப் பேசுவதற்கான சட்டப் போராட்டங்களையும் நடத்தினார் கலைஞர்.

கழகத் தியாகத்தைப் போற்றும் வகையில் வை.பெருமாள் அவர்களின் இறுதி ஊர்வலம், அப்போது சென்னை மாநகரத் தந்தையாக இருந்த இன்றைய முதலமைச்சரின் தலைமையில் கலைஞர், பேராசிரியர் உள்ளிட்ட கழகத் தலைவர்களும் , முன்னோடிகளும் தோழமைக் கட்சியினரும் கலந்துகொண்டு கண்ணீர் வடித்தனர்.

*52* வயதில் நிகழ்ந்த அவரது மரணம் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு மட்டுமல்ல கழகத்துக்கும் பேரிழப்பாகவே அமைந்தது. “அந்த உருவமா சாய்ந்து விட்டது என நானும் எண்ணியெண்ணிப் பார்த்தேன், ஏங்கியேங்கித் தவித்தேன்” என கலைஞரின் பேனா ஏக்கம் கொண்டது.

அது ஏக்கமல்ல, கழகப் பாட்டாளிகளின் தோழனுக்கு கலைஞர் அளித்த கவுரவம். அந்த நினைவுகளை, பாட்டாளிகள் மத்தியில் உயரும் கழகக் கொடி, என்றைக்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

...துடிக்கும்

## இனியாவது ஆபத்தை உணருமா ஒன்றிய அரசு?

நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டிய கட்டாயத்தில், பள்ளிகளில் படிக்கும்போதே பயிற்சி மையங்களில் இணையும் மாணவர்கள் எதிர்கொள்ளும் துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. மன ரீதியான நெருக்கடிகளால் மாணவர்கள் எடுக்கும் முடிவுகளும் விபரீதத்தை ஏற்படுத்துகின்றன.

அதிக அளவில் பயிற்சி மையங்களைக் கொண்டிருக்கும் ராஜஸ்தான் மாநிலம், கோட்டாவில் 2023-ஆம் ஆண்டில் மட்டும் நீட், ஜே.இ.இ., போன்ற தேர்வுகளுக்குத் தயாராகிக் கொண்டிருந்த 26 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டனர். தற்கொலைகளைத் தடுக்க நுழைவுத் தேர்வுகளை ரத்துசெய்ய வேண்டுமென்ற குரல்களைக் காது கொடுத்துக் கேட்க ஒன்றிய அரசு தயாராக இல்லை. ஆனால், ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் இப்போது பயிற்சி மையங்களுக்குச் சில வழிகாட்டுதல்களைக் கொடுத்திருக்கிறது.

“16 வயதுக்குக் குறைவான மாணவர்களைப் பயிற்சி மையங்களில் சேர்க்கக்கூடாது, மேல்நிலைக் கல்வியை முடித்த மாணவர்களை மட்டும்தான் சேர்க்க வேண்டும், தரவரிசையில் கட்டாயம் இடம் கிடைக்கும் என்ற வாக்குறுதிகளைப் பெற்றோருக்கு அளிக்கக் கூடாது” என்று அறிவுறுத்தியிருக்கிறது ஒன்றிய கல்வி அமைச்சகம்.

தற்கொலைகளைத் தடுக்க இத்தகைய வழிகாட்டுதல்கள் முழுமையான தீர்வாகாது. நுழைவுத் தேர்வுகளை நீக்குவது ஒன்றே தீர்வு. அதுதான் மக்கள் மனநிலையும் கூட. தி.மு.க-வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி இணைந்து நடத்தும் ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்தில் இதுவரை 80 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டிருப்பதே அதற்கு சாட்சி.

## :ப்ளாஷ்பேக்



### வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்பு!

**2000**-ஆம் ஆண்டு சிவகங்கைக்கு அரசு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். அவரது வாகனம் காரைக்குடியிலிருந்து சிவகங்கைக்குச் சென்று கொண்டிருந்த போது எங்களுடைய கிராமமான இலங்குடியில் வாகனத்தை நிறுத்த சொல்லி நாங்கள் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு நிகழ்வில் பங்கேற்றார். அதன் பிறகு சிவகங்கைக்குச் சென்று தலைவர் கலைஞர் அவர்களுடன் மேடையில், நான் புகைப்படம் எடுத்துக்கொண்டேன். அன்றைய கழகப் பொருளாளர் ஆற்காட்டார் அவர்களும் தலைவர் கலைஞர் அருகிலிருந்தார். தலைவர் கலைஞருடன் நான் முதன்முதலாக எடுத்துக்கொண்ட புகைப்படமிது.



அண்ணாமலை

**-இலங்குடி அண்ணாமலை,**
**ஒன்றியப் பிரதிநிதி,**
**கல்லல் மேற்கு ஒன்றியம்,**
**சிவகங்கை.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மக்கள் கடலில் நடேசனார்!

**1937 ஆம் ஆண்டு பிப்ரவரி 18-ஆம் நாள் இந்தியாவில் 5-வது பொதுத் தேர்தல் நடைபெற்றது. நீதிக்கட்சியும் காங்கிரஸும் முதன்முதலாக நேரடிப் போட்டியைக் கண்ட அந்த நாளில்தான் டாக்டர் நடேசனார் மறைவுற்றார். திருவல்லிக்கேணி, பெரிய தெரு மக்கள் வெள்ளத்தில் வங்கக் கடலானது. மனிதநேய மாந்தருக்குச் சூட்டப்பட்ட மாலைகள் மலைபோல குவிந்தன. அவரது வீட்டில் இருந்து 2 கி.மீ தொலைவில் உள்ள இடுகாட்டுக்குச் செல்ல 3 மணி நேரம் ஆனது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 363




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.